விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை (18.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சட்டவிரோதமாக குடியேறினால் 72 மணிநேரத்தினுள் நாடுகடத்தல்

## அவுஸ். வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு), அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் வகையில் சட்ட விரோதமாக குடியேறுவோர் 72 மணித்தியாலங்களுக்குள் நாடு கடத்தப்படுவர் என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அத்துடன் தஞ்சம் கோருவோரை தாம் பொருளாதார புகலிடக் கோரிக்கையாளர்களாவே கருதுவதாகவும் அவர்கள் அவுஸ்திரேலியாவில் வருமானத்தை ஈட்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே இந்த ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டின் போது அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக குடியேறி அகதி அந்தஸ்து கோருவோரை நாம் பொருளாதார தஞ்சக் கோரிக்கை யாளர்களாகவே கருதுகிறோம். அவர்கள் அவுஸ்திரேலியாவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மண்சரிவால் 5 பேர் பலி

வீட்டின் மீது மண்மேடுகள் சரிந்து விழுந்ததனால் மாத்தளையில் 5 பேர் பலியானதுடன் பலத்த காயங்களுடன் 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரத்தோட்டை,அல்வத்தை,லோன்வில,வெல்லன்காவத்தை மற்றும் திக்கும்பர ஆகிய இடங்களிலேயே இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## மரம் முறிந்து வான்மீது விழுந்து மூவர் பலியாகினர்

மாத்தளை ரத்தோட்டை பகுதியில் வான் ஒன்றின் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் வானில்பயணித்துக் கொண்டிருந்த மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. அத்துடன் மேலும் 6 பேர் காயமடைந்த நிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதிகள் வராததால் 30 வழக்குகள் ஒத்திவைப்பு

உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்குகளை விசாரிக்க வேண்டிய நீதிபதிகள் மூவரில் இரண்டு பேர் நீதிமன்றம் வராத நிலையில் வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

நீதிபதி ஷிராணி திலகவர்த்தனவுடன் சேர்ந்து நீதிபதிகள் சந்திரா ஏக்கநாயக்க எஸ்.ஐ. இமாம் ஆகியோர் வழக்குகளை விசாரிப்பதாக இருந்தது.

இலங்கை தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான கண்டன பதவி நீக்க விசாரணைகளில் அவருக்கு எதிராக சாட்சியம் வழங்கியிருந்தவர் நீதிபதி ஷிராணி திலகவர்த்தன ஆவார்.

நீதிபதி திலகவர்த்தனவுடன் சேர்ந்து அமர்ந்து வழக்குகளை விசாரிக்கவிருந்த நிலையில், முன்னறிவிப்பு எதுவும் இன்றி நீதிபதிகள் எக்கநாயக்கவும்,இமாமும் நீதிமன்றம் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் உச்சநீதிமன்ற வழக்குகளை நீதிபதி ஒருவர் தனியாளாக விசாரிக்க முடியாது என்பதால், விசாரணைக்கு வந்த முப்பதுக்கும் மேற்பட்ட வழக்குகள் பிற திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதனிடையே, சட்டத்தரணிகள் சங்க உப தலைவர் அனோமா குணதிலகவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப் போவதாக சட்டத்தரணிகள் சங்கத்தினர் அறிவித்தனர்.

நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்க அரசு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு



இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் பொப் கார் நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, சட்டவிரோத குடியேற்றம், இரண்டு நாடுகளுக்குமிடை (20ஆம் பக்கம் பார்...)

## விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் அரியாலை புங்கன்குளம் சந்தியருகே இடம் பெற்றுள்ளது.

இதில் நாவற்குழியை சேர்ந்த யோகராசா நிலாகரன்(வயது 32) என்பவரே பலியானவராவார்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவது, வெதுப்பகத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தறையில் சிவப்பு மழை

மாத்தறை,கிரிந்த, புஹஸ்வெல்ல பிரதேசத்திலும் நேற்று திங்கட்கிழமை சிவப்பு மழை பெய்துள்ளது.

பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பித்த இந்த மழை, சுமார் அரை மணித்தியாலம் வரை நீடித்தது என பிரதேச செயலாளர் பிரிவு அறிவித்துள்ளது.

இதனையடுத்து மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. (எ-11)

## நாட்டில் சீரற்ற காலநிலை; மட்டு.வில் 490 வீடுகள் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நேற்று அதிகாலை வீசிய மினி சூறாவளி காரணமாக 490 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பெருமளவான பொருளாதார வளமும் சேதமடைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, ஏறாவூர் பற்று ஆகிய பகுதிகளில் வீசிய இந்த மினி சூறாவளி காரணமாக இந்தச் சேதமேற்பட்டுள்ளது.

இந்த மினி சூறாவளி காரணமாக களுவாஞ்சிக்குடி பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தின் மகிழூர், கண்ணகிபுரம், குருமண்வெளி, எருவில், களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகள் இதன்போது கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் உள்ள மரங்கள் கடும் காற்றினால் முறிந்து விழுந்துள்ள நிலையில் வீதிகளின் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் 384 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் அவற்றில் 52 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பிரதேச செயலர் சுதாகர் தெரிவித்தார்.

அத்துடன் இப்பிரதேசங்களில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோன்று வெல்லாவெளி பிரதேசத்தில் 18 வீடுகள் சேதமடைந்ததுள்ளதுடன், கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் மினி சூறாவளி தாக்கிய நிலையில் 53 வீடுகள் சேதமடைந்துள்ளதாக பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பதில் செயலாளர் வில்வரெட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை கண்டியில் கடும்மழைபெய்து வருவதால் மண (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆப்கான் அமைச்சர் இலங்கை வருகிறார்

ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஷல்மை ரசூல் இன்று இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஸல்மை ரசூல் 18- 21ஆம் திகதிவரை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக ஆப்கானிஸ்தானின் வெளிவிவகார (20ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீனக் குழுவை அறிவிக்க கோரிக்கை

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை பரிசீலிக்க அமைக்கவுள்ளதாக ஜனாதிபதியினால் தெரிவிக்கப்பட்ட சுயாதீன குழுவை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனந்தெரியாத நபர்கள் சட்டத்தரணி மீது தாக்குதல்

(கொழும்பு)

இனந்தெரியாத நபர்களினால் சட்டத்தரணி ஒருவரின் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது.

நான்கு இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொரலஸ்கமுக பிரதேசத்தில் இத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

சட்டத்தரணி குணரட்ன வன்னிநாயக்கவின் மீதே இவ்வாறு தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் முயற்சி சம்பவம் தொடர்பில் சட்டத்தரணி குணரட்ன பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (எ-11)

# இந்திய வீட்டுத்திட்டம் வழங்கலில் வன்னி மக்கள் பெரும் பாதிப்பு

(வன்னி)

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் வன்னியுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். புள்ளித் திட்டத்தின் அடிப்படையில் அந்தத்திட்டம் வழங்கப்படவுள்ளதால் இந்த அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பெருமளவான மக்கள் பிரதேச செயலகங்கள் நோக்கி படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

வட மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேறியுள்ள சிங்கள முஸ்லிம் மக்களையும் அந்தத்திட்டத்தில் உள்வாங்கும் நோக்கில் இந்தியன் வீட்டுத்திட்டம் புள்ளியடிப்படையில் வழங்க அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் யாழ். குடாநாட்டில் இந்தியன் வீட்டுத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள இறுதிக்கட்ட பயனாளிகளில் 100க்கு 20 வீதமானவர்களே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் உள்வாங்கப்பட்டனர்.

கடந்த காலத்தில் யாழ்.குடாநாட்டில் வழங்கப்பட்ட உலக வங்கியின் வீட்டுத்திட்டம் நேரடியாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இந்திய வீட்டுத்திட்டம் புள்ளியடிப்படையில் இடம்பெறுவதால் யுத்தத்தால் அனைத்தையும் இழந்த மக்கள் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தினையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கறையுள்ளவர்கள் கவனம் எடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் முழுமையாக உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-11)

# அபிவிருத்தி மன்ற அங்குராப்பண நிகழ்வு

(புலோலி)

புலோலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வராத்துப்பளை சாந்தா தோட்டம், உத்திராவத்தை, ஊரியாவத்தை பகுதியைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் நலன் கருதி சமூக பொருளாதார அபிவிருத்தி மன்றம் அங்குராப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு இன்று மாலை ஆறு மணிக்கு புலோலி கிழக்கு சிறிமுதலியம்பாள் ஆலய முன்றலில் பருத்தித்துறை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் மா.லோகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதேச மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# கேபிள் ரீவி நிலையங்கள் வடக்குக் கிழக்கில் முற்றுகை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கெங்கும் கடந்த 12ஆம் திகதி தொடக்கம் இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழு, கேபிள் ரீவி வழங்குநர்களின் கட்டுப்பாட்டறையினை திடீரென முற்றுகையிட்டு இலட்சக்கணக்கான பெறுமதிமிக்க பொருட்களை எடுத்துச் சென்றுள்ளதாக வவுனியா, மன்னார் மாவட்ட கேபிள் ரீவி வழங்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் உச்சிதனை முகர்ந்தாலே திரைப்படம் இந்தியத் தொலைக்காட்சியான சன் ரீவியில் ஒளிபரப்பப்பட்டது. இலங்கையில் ஒளிபரப்பான இத் திரைப்படம் இடைநடுவே நிறுத்தப்பட்டு வேறொரு திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வட கிழக்கில் இவ் அதிரடி முற்றுகையில் வவுனியா குருமண் காட்டில் சட்டவிரோதமாக இயங்கிய கேபிள் ரீவி நிலையத்தை முற்றுகையிட்டு இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பொருட்களை கைப்பற்றியதுடன் கடந்த 14ஆம் திகதி மன்னார் எழுத்தூரில் இயங்கிய சட்டவிரோத கேபிள் ரீவி நிலையத்திலும் இரண்டு இலட்சம் பெறுமதியான பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

அதேபோன்று மட்டக்களப்பிலும் முற்றுகையிட்ட போது ஏற்கெனவே தகவல் அறிந்த மட்டக்களப்பு சட்ட விரோத கேபிள் ரீவி இயக்குநர்கள் பொருட்களை வேறு இடத்திற்கு மாற்றியதுடன் தற்போது கேபிள் ரீவி நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வட கிழக்கில் இயங்கிய ஆஸ்க் கேபிள் ரீவி வழங்குநர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து கேபிள் ரீவி வழங்குநர்களையும் இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் சிறப்பு அதிகாரிகள் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அசாதாரண கால நிலையில் மாத்தளையில் 50 மாணவர்கள் பரீட்சை எழுத முடியவில்லை

(மாத்தளை)

மாத்தளை கூம்பியங்கஹாவெல பரீட்சை மத்திய நிலையத்தைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரகணிதப்பாடப்பரீட்சைஎழுத முடியாமல் போய்விட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திலக் ஏக்க நாயக்க தெரிவித்தார்.

தற்போது நிலவும் அசாதாரண கால நிலைகாரணமாக ஹெலிகொப்ரர் மூலம் அனுப்பப்படவிருந்த வினாப்பத்திரங்களை அனுப்ப முடியாமல் போய்விட்டதாலேயே மேற்படி மாணவர்களால் பரீட்சை எழுத முடியாமல் போய்விட்டதாக அவர் கூறினார்.

அத்துடன் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள பரீட்சைக்கான வினாத்தாள்களை கடற்படையினரின் உதவியுடன் படகு மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் குறைவடைந்துள்ளது

## ஜெயலலிதா தெரிவிப்பு



(சென்னை)

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதல் வெகுவாக குறைந்துள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுக்காலை தொடங்கிய மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் கலந்து கொள்ளும் மூன்று நாள் மாநாட்டில் கலந்து கொண்டு தலைமை தாங்கிய முதலமைச்சர் ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநாட்டைத் தொடக்கிவைத்து பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழக அரசின் கண்டனத்தைத்தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரின் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் வெகுவாக குறைந்துள்ளதாகவும், 2012ஆம் ஆண்டில் தமிழக மீனவர்கள் ஒருவர் கூட இலங்கைப் படையினரின் தாக்குதலில் உயிரிழக்கவில்லையென்றும் கூறினார்.

தமிழக மீனவர்கள்மீது கடந்த ஒருவார காலத்தில் இலங்கை கடற்படையினர் இரண்டு முறை தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடலில் குளிக்கச் சென்ற போது கடல் அலை இழுத்துச் சென்றதால் உயிரிழந்த இளைஞனின் சடலம் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் உயிரிழந்தவர் புன்னாலைக் கட்டுவன் கிழக்கு குப்பிளானைச் சேர்ந்த உதயகுமார் நிதர்சன் (வயது-21) என்பவராவார். இவர் இலங்கை வங்கியில் பணி புரிந்தவர்.

நேற்று முன்தினம் கடல் கொந்தளிப்புடன் [illegible]பட்டுள்ளமையால் கடலினுள் அதிக தூரம் செல்ல வேண்டாம் என பாதுகாப்புத் தரப்பினர் எச்சரித்து இருந்தும் அதனை மீறி குறித்த இளைஞன் சென்றதனாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. (எ-6)

# படகு கவிழ்ந்து மீனவர்கள் காயம்

(புலோலி)

நாகர்கோவில் கிழக்குக் கடலில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்களின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் சிறு காயங்களுடன் தப்பிக்கொண்டனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன் மூலம் மீனவர்களின் படகு, இயந்திரம், வலை என்பன சேதமடைந்துள்ளன. இதேவேளை சிறுகாயங்களுக்குள்ளான மீனவர்கள் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பினர். (எ-11)


பிள்ளையார் இன்

50% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
தோசை சட்னி சாம்பாருடன் ரூ 70/-
மசாலா தோசை சட்னி சாம்பாருடன் ரூ 90/-

(சி-1799) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



A Full Time Management Opportunity

கனடியன் முகாமைத்துவ Company தன் 5 கிளைகளை வடக்கில் திறக்கவுள்ளதால் உடனடி வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

கீழ்வரும் பதவிக்கான பயிற்சி வழங்கப்படும்.

★ விநியோக தொடர்பாளர்கள் (Distributors)
★ கண்காணிப்பாளர் (Supervisor)
★ உதவி முகாமையாளர்கள் ( Asst.Manager)
★ முகாமையாளர்கள் (Manager)

குறிப்பு : தங்குமிடம் ஆண்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதோடு ஆண்-பெண் இருபாலாருக்கும் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

தகுதி : O/L படித்திருத்தல் அவசியம்.

அழைக்கவேண்டிய இலக்கம்: 0772-151014, 0778 330074, 021-7212045

(1181)


# நல்லூர் பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் -2013 மக்கள் பார்வைக்கு

நல்லூர் பிரதேச சபையின் 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 18.12.2012 ஆம் திகதியிலிருந்து 24.12.2012ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

- ❖ தலைமை அலுவலகம் – கருவப்புலம் வீதி, கொக்குவில்.
- ❖ நல்லூர் உப அலுவலகம் – ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- ❖ கொக்குவில் உப அலுவலகம் – பிறவுண் வீதி, கொக்குவில்.
- ❖ பொதுநூலகம்கோண்டாவில்–நாராயணன்வீதி,கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- ❖ பொது நூலகம் கொக்குவில் – பிறவுண் வீதி, கொக்குவில்.
- ❖ பொது நூலகம் நல்லூர் – கலாசாலை வீதி, திருநெல்வேலி.

நல்லூர் பிரதேச சபை, கொக்குவில். (சி-1806)

ப.வசந்தகுமார், தலைவர், நல்லூர் பிரதேச சபை.







WESTERN UNION MONEY TRANSFER

தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

(சி-1719)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## யமன் கேட்ட கேள்வி

யமதர்மன் ஒரு சமயம் பூலோகத்திற்கு வருகை தந்தார்.

அப்போது அவர் திருமணம் நடந்து கொண்டிருந்த வீடொன்றினுள் நுழைந்தார்.

யாரைத் தேடிக்கொண்டு அவர் அங்கு வந்தாரோ தெரியவில்லை.

அத்திருமண வீட்டு வாசலின் கதவோரமாக ஒரு எலி நின்று கொண்டிருந்தது.

அந்த எலியைப் பார்த்து யமன், "நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார். இப்படியாக கேட்டுவிட்டு, அவர் தன் போக்கில் கல்யாண வீட்டிற்குள் சென்று விட்டார்.

இதைக்கேட்ட எலிக்கு ஒரே யோசனை "யமன் என்னைப் பார்த்து- நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டு விட்டுப் போகிறாரே! அப்படியானால் நான் இந்நேரம் யமலோகத்தில் இருக்க வேண்டிய ஆளா?'' என்று நினைத்தது.

அந்த எண்ணம் காரணமாக, எலிக்கு மரணப்பயம் ஏற்பட்டு விட்டது. உடனே அது அழ ஆரம்பித்தது.

வெளியே வந்து ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்து கொண்டு அழ ஆரம்பித்தது.

அச்சமயத்தில் பருந்து ஒன்று அங்கே பறந்து வந்தது.

எலி அழுவதைப் பருந்து அவதானித்து விட்டு, ''ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது.

அதற்கு எலி, ''யமன் இப்படியாக என்னைக் கேட்டு விட்டுப் போனார்" என விடயத்தைச் சொல்லி அழுதது.

இதைக் கேட்டதும் பருந்திற்கு ஒரே சிரிப்பு.

எலியின் துன்பம் பருந்திற்கு விளங்கி விட்டது.

உடனே "கவலைப்படாதே! உனக்கு ஏதாவது கெடுதல் வர வேண்டுமென்றால், அது என்னால்தான் வர வேண்டும். நான் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யமாட்டேன்- என உனக்கு இப்போதே வாக்குறுதி தருகிறேன். தைரியமாக இரு" என்று கூறியது.

''இருந்தாலும் யமன் திரும்பி வருகை தரும்போது என்னைத் தூக்கிக் கொண்டு போய்விட்டால் நான் என்ன செய்வது?" என்று எலி கேட்டது.

"அதற்கு ஒரு வழி உண்டு! நீ உடனே என்னுடன் புறப்படு. நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் கவனமாக ஓரிடத்தில் வைத்து விடுகிறேன்" என்று பருந்து கூறியது.

"சரி" என்று கூறி எலி பருந்துடன் புறப்பட்டது.

பருந்து எலியைத் தூக்கிச் சென்று ஒரு மலையுச்சியின் பொந்தில் அவதானமாக வைத்தது. பின்னர் பருந்து திரும்பவும் பறந்து வந்து அந்தக் கல்யாண வீட்டினுள் நுழைந்து கொண்டது.

அச்சமயத்தில் யமன் வெளியே வந்து கொண்டிருந்தார். அவர் கதவோரமாக அந்த எலியைத் தேடினார். எலி அங்கு இல்லை.

அப்போது அந்தப் பருந்து சிரித்துக் கொண்டே யமனிடம் சென்று, "நான்தான் எலியைக் கவனமாக எடுத்துச் சென்று மலையுச்சியின் பாறை மறைவில் வைத்திருக்கிறேன்'' என்று விடயத்தைக் கூறியது.

அதைக் கேட்டதும் யமன், "அப்பாடா!" என்று பெரு மூச்சு விட்டது.

பின்னர் யமன் கூறியது; ''அதுதானே பார்த்தேன்... இன்று இந்நேரத்தில் அந்த எலிக்கு மலையுச்சியில் உள்ள பொந்தில் ஒரு பூனையால் மரணம் ஏற்பட வேண்டும் என்றுள்ளது. அப்படியிருக்கும் போது அந்த எலி இங்கே நின்று கொண்டிருக்கிறதே என்று பார்த்தேன். அதனால்தான் ''நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று எலியிடம் வினவினேன். இந்நேரம் அங்கே எலியின் கதை முடிந்திருக்கும்'' என்றது.

இந்தக் கதையானது "இயற்கையின் கணக்கு எப்போதும் சரியாகவே முடியும்" எனத் தெரிவிக்கிறது.

அத்துடன் இயற்கையின் நடைமுறை உயிர்களின் விருப்பத்திற்கெல்லாம் வளைந்து கொடுக்காது என்பதை விளக்குவதற்கே கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பேருந்து சேவையை சீராக்கக்கோரி மக்கள் மகஜர் அனுப்பி வைப்பு

(மல்லாவி)

துணுக்காயில் இருந்து மாங்குளம் ஊடாக பருத்தித்துறைக்கும் பருத்தித்துறையில் இருந்து மாங்குளம் ஊடாக துணுக்காய் வரைக்கும் என தனியார் மற்றும் அரச போக்குவரத்து சேவை எதுவுமே இல்லாததால் பொது மக்கள், மாணவர்கள் உட்பட அரச உத்தியோகத்தர் அடங்கலாக பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்விடயத்தில் கவனமெடுக்குமாறு கோரி அரச அதிபர்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தத்திற்கு முன்னரான காலப் பகுதியில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் தினசரி இரு சேவைகளை திறம்பட செய்த போது மல்லாவியில் உற்பத்தியாகும் விவசாயப் பொருட்கள், பருத்தித்துறையில் உற்பத்தியாகும் பனை உற்பத்திப் பொருட்கள் உட்பட சிறுகைத்தொழில் பொருட்களையும் சந்தைப்படுத்தி வந்தோம்.

இதைவிட அரச உத்தியோகத்தர்கள் பலர் இப்பேருந்து சேவையைப் பயன்படுத்தி வன்னியில் எமது தேவைகளை நிறைவேற்றி வைத்ததை காணக்கூடியதாக இருந்தது.

இன்று சமாதான காலத்தில் இவை சாத்தியமற்றதொன்றாக இருப்பது எமக்கு வேதனையாக உள்ளது. தற்போது மீள்குடியேறிய பின்னர் முல்லை. மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தால் துணுக்காய் பருத்தித்துறைக்கான ஒரு சேவை நடத்தப்பட்டது.

அதுவும் பருத்தித்துறை தனியார் போக்குவரத்து சங்கத்தின் கீழ் வந்த போது ஒரு சில நாட்கள் நடைபெற்று பின்னர் தடைப்பட்டு வருடக் கணக்காகி விட்டது.

துணுக்காய், கிளிநொச்சி, முல்லை., ஆகிய கல்வி வலயங்கள் உட்பட இங்குள்ள பல திணைக்களங்களுக்கு நூற்றுக்கணக்கான வடமராட்சி அரச உத்தியோகத்தர்கள் தினசரி வந்து போகின்ற போது கடமைக்கு சமூகம் கொடுப்பதில் போக்குவரத்து சீரின்மை காரணமாக சிக்கல்கள் எழுந்துள்ளது. எனவே, அனைவரது நன்மை கருதி எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்தாவதுஒரு ஆரோக்கியமானசேவையை வழங்குவதற்கு ஆவன செய்து தருமாறு பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

# முல்லைத்தீவில் இதுவரை மீள்குடியமர்த்தப்பட்டோர்

(முல்லைத்தீவு)

யுத்தத்தால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையம் மற்றும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்தவர்களில் 38 ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 424 உறுப்பினர்கள் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதில் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 536 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 789 உறுப்பினர்களும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 554 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 78 உறுப்பினர்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 649 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 400 உறுப்பினர்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 585 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 868 உறுப்பினர்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 414 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 564 உறுப்பினர்களும், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 222 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 725 உறுப்பினர்களுமே கடந்த நவம்பர் 30 ஆம் திகதி வரை மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (அ-3-267)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 200 | 400 | 350 |
| தக்காளி | 90 | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 80 | 70 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 60 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 180 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 90 | 120 | 180 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | -- | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | -- | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | 150 | -- |
| போஞ்சி | 70 | 80 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 50 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 35 | 30-35 |

# இராசி பலன்

18.12.2012
(மார்கழி 03, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 4.47 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.33 மணிவரை
இராகுகாலம் 3.23-4.53 மணிவரை
சுபநேரம் 10.53-12.23 மணிவரை
விநாயகர் சஷ்டி விரதம்.

**மேடம்**

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**இடபம்**

சொல்லை செயலாக்கிக் காட்ட முன்வருவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்தவர்களை சந்தித்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்**

பகை விலகி பாசம் கூடும் நாள், பாதியில் நின்ற பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள், தொழில் நிமித்தம் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வேலைச் சுமை குறையும்.

**கடகம்**

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**சிங்கம்**

தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையலாம், குடும்பத் தேவைகளில் தாராளம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு.

**கன்னி**

தொழிலில் உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும், சுவாரஸ்யமான நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**துலாம்**

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்விகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்**

நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், உறவினர் வருகையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**

உடன் பிறப்புகள் உதவி செய்ய முன்வருவர், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைக்க வேண்டிய நாள்.

**மகரம்**

இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்**

ஒருசில வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்க நேரிடலாம், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள்.

**மீனம்**

உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் அதிகரிக்கும், சில சமயம் உணர்ச்சிவசப்படும் நிலை ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மப்பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் காயம்

பற்றைக் காணியினை துப்புரவு செய்து கொண்டிருக்கும்போது மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார். இவ்வெடிப்புச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் மயிலங்காடு வைரவ கோயிலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புன்னாலைக்கட்டுவன் தெற்கினைச் சேர்ந்தவரும் 5 பிள்ளைகளின் தந்தையாருமான சின்னத்துரை ஜோகராஜா (வயது 48) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவர். குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் வேலையின் நிமிர்த்தம் மயிலங்காட்டிலுள்ள காணியை துப்புரவு செய்யும் போது காணியின் வேலியோரமாக காணப்பட்ட மண் புற்றினை புற்று வெட்டியால் வெட்டியுள்ளார். இதனால் அதனுள் மறைந்து புதைந்திருந்த மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் அவ்விடத்திலிருந்து தூக்கியெறியப்பட்டார்.

இதில் தெய்வாதீனமாக உயிர் தப்பிய அவர் முகத்திலும் கைகளிலும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெடித்த மர்மப் பொருள் கைக்குண்டாக இருக்கலாம் என காயமடைந்த குடும்பஸ்தர் தெரிவித்ததோடு பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)



நன்றி:அததெரண

# 2009 ஆம் ஆண்டுக்குப் பின் மீள்குடியேறிய மக்களின் விபரம் கோரப்படுகின்றன

## இவர்களுக்கே இந்திய வீட்டுத்திட்டத்தில் முன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

**2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள்குடியேறிய குடும்பங்களின் விபரம் இந்திய வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவிற்காக பிரதேச செயலர்களிடம் கோரப்பட்டுள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 8 ஆயிரம் பேருக்கு மேல் வீடுகள் வழங்கப்படவுள்ளன. இந்த வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு தற்போது இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாக பல சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

புள்ளியடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது பயனாளிகள் தெரிவு தொடர்பில் பல விமர்சனங்கள் ஏற்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாக மீளாய்வுக் கூட்டம் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் மீள்குடியேறிய குடும்பங்களின் விபரம் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக அடையாளப்படுத்தப்பட்டு நாளை புதன்கிழமை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதில் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மீள்குடியேறிய குடும்பங்களும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேறிய குடும்பங்களும் உள்ளடங்குகின்றன. இந்தக் குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் பிரதேச செயலர் ஊடாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,




இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் இலகுபடுத்துவதும் அவசியமானது. வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவு குறித்து உரிய முறையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் புதிதாக உள்வாங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களை இணைத்துக் கொள்வதனூடாக தகவல்களை சரியாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு தரவுகளைத் திரட்டி பயனாளிகள் தெரிவு செய்யப்படாமலும் வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் விரைவுபடுத்தாமலும் இருப்பின் அதற்குரிய பணம் திரும்பிச் சென்றுவிடும். இந்தியத் தூதுவர் இதனைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது எனவும் மேற்படி கூட்டத்தில் அமைச்சர் அறிவித்தார். மேலும் இந்த கூட்டத்தில் பிரதேச செயலர்கள் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்களும் கலந்து கொண்டு கருத்துக்களைக் கூறியிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பிரதேச செயலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# அரச தாதியர்கள் நாளை சுகவீன விடுப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினால் சுகவீன விடுமுறைப்போராட்டம் ஒன்று நாளை புதன்கிழமை நடத்தப்படவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை அரசாங்க தாதிமார் சங்கம் அறிவித்துள்ளது.

எனவே, அன்றைய தினம் மட்டுப்படுத்தப்பட்ட விடுதி அனுமதியும் அவசர சிகிச்சைகளுமே மேற்கொள்ளப்படும் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

600 சுகாதார நிலையங்களில் 25 ஆயிரம் தாதிமார் வேலை நிறுத்தங்களில் பங்கு கொள்ளவுள்ளனர்.

தமது தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அதிகாரிகள் செயற்படுவார்களானால் வேலை நிறுத்தம் தொடர்பாக மீண்டும் சிந்தித்துப் பார்க்கலாமென சங்கத் தலைவர் சமன் ரத்ன பிரிய தெரிவித்துள்ளார்.(அ-9)

# மாநகர சபையில் ஒளிவிழா

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஒளிவிழா நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகர சபை அலுவலக வளாகத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# மீசாலை வயற்கரை வீதியை புனரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மீசாலை வயற்கரை வீதி புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதன் ஒரு பகுதி வீதி நகர சபை எல்லைக்குட்பட்டுள்ளதால் அப்பகுதி புனரமைக்கப்பட்டுள்ளது.

எனவே, சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட வீதியை விரைவில் புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# தெல்லிப்பழையில் இரத்த வங்கி திறப்பு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி திறப்பு விழா நேற்று முன்தினம் வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.உமாதரன் தலைமையில் இடம்பெற்றது.



வைத்தியசாலை இரத்த வங்கியை மகப்பேற்று மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி குழந்தை வடிவேலு திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து இந்து, கிறிஸ்தவ மத குருமார்கள் ஆசியுரை வழங்கினர்.

இந்நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், 515 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரன்தெனிகல, தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி, தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி நந்தகுமார், உடுவில் சுகாதார வைத்தியதிகாரியும் முன்னாள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரியுமான வைத்திய கலாநிதி ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# த.வி.கூட்டணியின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலை கூட்டணியின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

இப்பொதுச்சபைக் கூட்டத்தில் மத்திய செயற்குழு உறுப்பினர்களின் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் தற்கால அரசியல் நிலைமை பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறவு ள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் பிரச்சினைகள் குறித்து முறையிடலாம்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளுக்கு அவ் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெறாது சமூகத்தில் இருப்பவர்களினால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகங்களில் முறையிடலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு ஆணையாளர் உப அலுவலகங்களில் இது குறித்து முறைப்பாடு செய்யமாறு அவ் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு ஏனைய முன்னாள் போராளிகள் தொந்தரவு கொடுப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம் குறித்து புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தர்சன கெட்டி ஆராச்சி தெரிவிக்கையில்,

முன்னாள் போராளிகள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகங்களில் முறையிடுமாறு அவர் தெரிவித்தார். (அ-2)

# பொருளாதார அகதிகளை திருப்பி அனுப்புவது சிறந்தது

## ஆஸி.முன்னாள் அமைச்சு வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அகதிகளை திருப்பியனுப்பும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு அந்த நாட்டின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அங்குஸ் ஹூ்ட்சன் ஆதரவு வெளியிட்டுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் அன்றி நாட்டுக்குள் வரும் பொருளாதார அகதிகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்தும் திருப்பியனுப்ப வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இவ்வாறு பொருளாதார அகதிகள் திருப்பியனுப்படுவதால் அவர்கள் உரிய சட்ட ரீதியான வகையில் அவுஸ்திரேலியாவுக்குள் தொழில் நிமித்தம் வருவதற்கான வாய்ப்பு ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 13 ஆம் திகதி முதல் படகு மூலம் சென்றவர்களில் 800 பேரை அவுஸ்திரேலியா பொருளாதார அகதிகள் என்று கூறி இலங்கைக்கு திருப்பியனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


2013 இற்கான புதிய அனுமதிகள்

BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் 84, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் — மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (ஓட்டுமடச் சந்தி அருகாமை)

நீர்வேலி — பூதர் மடம் ஆல் இராச வீதி

கோப்பாய் — பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி

சாவகச்சேரி — சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை

மானிப்பாய் 1 — 262, ஆலடிச் சந்தி, யாழ் வீதி

அச்சுவேலி — ஆதார வைத்தியசாலை அருகாமை

மானிப்பாய் 2 — சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி)

சங்கானை — பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி)

சுன்னாகம் — Dr. சுபாரத்தினம் வீதி சுன்னாகம்

வடமராட்சி — பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி

சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

Certificate in English — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு

Diploma in English — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு

ESOL A1, A2 — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு

IELTS — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

★ Pre Foundation

★ Foundation

★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

(சி/1803)

British Business College

BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1966 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா:- 2 இல் செவ்.<br>உயரம்: 5'<br>தொழில்/ தகைமை: B.Com, CA (Final) Accountant<br>தொ. இல: B -786 | பிறப்பு: 1990 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>உயரம்: 5'<br>தொழில்/ தகைமை: A/L<br>தொ. இல: G -788 |
| பிறப்பு: 1981 RC<br>உயரம்: 5'6''<br>தொழில்/ தகைமை: முகாமையாளர் (டோகா, கட்டார்)<br>தொ. இல: B -787 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'<br>கி.பா: 4 இல் செவ்.<br>தகைமை: அவுஸ்திரேலிய (PR)<br>தொ. இல: G -791 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா: 8 இல் செவ்<br>உயரம்: 5' 6''<br>தொழில்/ தகைமை: Clerical (தனியார்)<br>தொ. இல: B -793 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா.:12 இல் செவ்.<br>உயரம்: 5' 3''<br>தொழில்/ தகைமை: தாதிய அலுவலர்<br>தொ. இல: G -792 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>உயரம்: 5'6''<br>தொழில்/ தகைமை: BSc Eng., MSc (பொறியியலாளர்)<br>தொ. இல: B -794 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>உயரம்: 5' 2''<br>கி.பா: 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>தொ. இல: G -795 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி



புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை

சரவணா ரெக்ஸ்

3000/= க்கு மேல் கொள்வனவு செய்யும் 3 அதிஷ்டசாலிகளுக்குப் பெறுமதியான பரிசில்கள்




யார் அந்த 3 அதிஷ்ட சாலிகள்




ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவருக்குமான அனைத்து விதமான ஆடைகள் புதிய தெரிவில்

15-12-2012 முதல் 31-12-2012 வரை

காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

உயர்தரமான ஆடைகளும் குறைந்த விலையும் அதுதான் சரவணா ரெக்ஸ்

டிசம்பர் 31 வரை மட்டுமே இச்சலுகை

அதிஷ்டம் பார்க்கப்படும். வாடிக்கையாளர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்

இடம்: வாரத்தில் 7 நாட்களும் வியாபாரம் நடைபெறும்

சரவணா களஞ்சியசாலை

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (கெங்காதரன் வைத்தியசாலைக்கு அருகாமை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சம்பந்தனின் காலத்திலேயே இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## மனோ கணேசனிடம் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த

(கொழும்பு)

தெற்கில் ஜே.வி.பியினர் நடத்திய போராட்டத்திற்கும் விடுதலை புலிகள் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. ஜே.வி.பி. நாட்டை பிரிக்க போராட்டம் நடத்தவில்லை. புலிகள் நாட்டை பிரிக்க போராட்டம் நடத்தினார்கள். அத்துடன் ஜே.வி.பி. இன்று தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. யுத்தம் முடிந்து சில ஆண்டுகளே ஆன நிலையில் புலிகள் இன்று தடை செய்யப்பட்ட அமைப்பு. புலிகளை நினைவு கூருவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவே விடுதலை புலிகள் நடத்திய போராட்டத்திற்கும் ஜே.வி.பியினர் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை பல்கலைக்கழக மாணவர்களுக்கு எடுத்து கூறுங்கள். இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.





ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசனின் பிறந்த நாளையொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக மனோ கணேசனுக்கு நேற்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி இருந்த வேளையிலேயே இந்த உரையாடல் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ கணேசன், உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யுங்கள்.

கடந்த காலங்களுக்கு நாட்டை மீண்டும் இந்த சம்பவங்கள் அழைத்து செல்வதை அனுமதிக்காதீர்கள். நாட்டின் முதன் குடிமகன் என்ற அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் விவகாரத்தில் நேரடி தலையீடு செய்யுங்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்ததற்கு பதிலளித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார். வேலைப்பளுவின் இடையில் இந்த மாணவர் விவகாரம் தொடர்பாக தனக்கு முழு விபரம், இன்னமும் கிடைக்கவில்லை. இது பற்றி எவரும் முழுமையாக விபரம் தெரிவிக்கவும் இல்லை. உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தற்சமயம் நாட்டில் இல்லை. அவர்தான் இந்த விவகாரம் தொடர்பான அமைச்சர். இன்னும் சில தினங்களில் அவர் நாடு திரும்புவார். அவர் வந்தவுடன் உடனடியாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கின்றேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் மாணவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் இந்த விவகாரம் தற்சமயம் பல்கலைக்கழக விவகாரமாக இல்லாமல் பாதுகாப்பு அமைச்சு விவகாரமாக மாறியுள்ளதாக நான் சுட்டிக்காட்டினேன். அதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி எனினும் இதை பல்கலைக்கழங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் மூலமே தான் அணுக விரும்புவதாக சொன்னார்.

இந்த சம்பவங்கள் இனப்பிரச்சினையை வைத்து அரசியல் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளன என ஜனாதிபதி கூறினார்.

அத்தகைய நோக்கம் எனக்கு கிடையாது என்பதாலேயே இதை நான் நேரடியாக உங்களிடம் கூறுகின்றேன் என நான் தெரிவித்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் காலத்துக்குள்ளேயே தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை தனது ஆட்சி காலத்தில் காணுவதை தான் பெரிதும் விரும்புவதாகவும் தெரிவித்தார்.(அ-2)

# இரணைமடுக்குள நீர் விநியோகம் குறித்து விசேட கலந்துரையாடல்

(பூநகரி)

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு இரணைமடுக்குளத்திலிருந்து நன்னீர் குடி நீர் வழங்கும் வேலைத்திட்டப் பிரதேசத்திற்குள் அக்கராயன், வட்டக்கச்சி ஆகிய பகுதிகள் உள்ளடங்கவில்லை எனவும் அவை விசேட ஏற்பாட்டின் கீழ் செய்யப்படுகின்றன எனவும் யாழ்ப்பாண கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

நன்னீர் குடிநீர் வழங்கும் வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் , இரணைமடுக்குளத்திலிருந்து கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்துக்கான நன்னீர் குடிநீர் வழங்கும் செயற்பாட்டுத்துறை பற்றிய திட்டமிடல் உரியகாலப்பகுதிக்கு முன்னர் பூர்த்தியடைந்துள்ளது. இரணைமடுக்குள திருத்த வேலைகள் நடைபெறுகின்ற அதேவேளை நீர் விநியோக வேலைகளும் கிளிநொச்சியிலிருந்து தட்டுவம்கொட்டி, பளை மற்றும் குடா நாடு முழுவதும் இடம்பெறவுள்ளது.

மேலும் சாவகச்சேரி, தனங்கிளப்பு பகுதிகளுக்கூடாக செல்லும் செயற்றிட்டமானது கேரதீவு, சங்குப்பிட்டி வீதியூடாக பூநகரி பகுதியிலும் நடைபெறும் என்றார்.

இதன் போது குறுக்கிட்ட பூநகரி பிரதேச சபை தவிசாளர் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப்பிரதேசத்திலிருந்து குஞ்சுப்பரந்தன் ஊடாக குறுகிய தூரத்தில் சாமிப்புலவை அடைவதன் மூலம் தொடர்பை ஏற்படுத்தி கொள்வதில் என்ன தடை என கேள்வி எழுப்பினார்.

அரச அதிபரும் அக்கேள்விக்கு பதிலளிக்குமாறு எந்திரியை வேண்டினார். இதற்கு பதிலளித்த எந்திரி பாரதிதாசன் இவ் விடயத்தை தான் கவனத்தில் எடுப்பதாக கூறினார்.மேலும் கருத்து தெரிவித்த பூநகரி தவிசாளர் பளைப்பிரதேசத்தின் தாவர விருத்திக்கும் தண்ணீர் சுத்திகரிப்புக்கும் திட்டம் வகுத்திருப்பதானது பூநகரிப்பிரதேசத்தில் அக்கறை குறைவு என்பதை தெளிவுபடுத்துகிறது என்றார். (அ-9)

## கண்காட்சியும் விற்பனையும்

மாங்குளம் மாதர்கிராம அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் விற்பனையும்இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு துணுக்காய் வீதி மாங்குளத்தில் உள்ள பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவி திருமதி விநாயகமூர்த்தி ஜானகி தெரிவித்துள்ளார்.

இச்சங்கத்தின் எஸ்.ஏ.எச் நிறுவனத்தின் வழிகாட்டலில் நடைபெற்ற பயிற்சி வகுப்பொன்றில் பயிற்சியினை நிறைவு செய்தபயிற்சியாளர்களினால் உற்ப்த்தி செய்யப்பட்ட உடைகள் உட்பட கைத்தொழிற் பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் துறைசார்ந்த அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், மாங்குளம் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட மாங்குளம் பிரதேச இராணுவ பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)



யாழ்.எயிட் நிறுவனத்தினால் கடந்த 5 ஆம் திகதி ஈழத்தமிழர் கழக சிட்னி கிளை அனுசரணையில் 12 வருடங்களின் பின்னர் மீள இயங்கத்தொடங்கிய கிளிநொச்சி கிளாலி றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உதவியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் மாத இராசி பலன்

# 16.12.2012-13.01.2013




**மூலம், பூராடம்**
**உத்திராடம் 1 ஆம் பாதம்**

**வருமானம் திருப்தி தரும்நேரம்!**
**உதவிக்கரம் நீட்டுவதன்மூலம் உள்ளத்தில் இடம்பிடிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

மார்கழிமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநான் குரு வக்ரம் பெற்று 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, மிகுந்த நற்பலன்களை நீங்கள் காணப்போகிறீர்கள். இராசிநாதனாக மட்டுமல்லாமல் கேந்திராத்பத்ய கிரகமாகவும் குரு விளங்குவதால் அதன் வக்ரகாலத்தில்தான் வளர்ச்சிகள் அதிகமாக இருக்கும். எனவே, அக்கறை செலுத்தாத சில காரியங்களில்கூட அமோக வெற்றி கிடைத்துவிடும். ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

தற்சமயம் பெயர்ச்சியாகி உள்ள இராகுவும் கேதுவும் உங்கள் இராசிக்கு நன்மையையே வழங்கும் விதத்தில் சஞ்சரிக்கிறார்கள். குறிப்பாக இலாப ஸ்தானத்தில் இராகு சஞ்சரிக்கும்பொழுது, எதிர்பாராத தன லாபம் வந்து, ஏராளமான நல்ல காரியம் செய்யத் தூண்டும். வாங்கல்- கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வளர்ச்சி கூடும். தேங்கிய காரியங்கள் இனி சுறுசுறுப்பாக நடைபெறத் தொடங்கும். அன்னிய தேசத்திலிருந்து வரும் அனுகூல செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

பஞ்சம ஸ்தானத்து கேது உங்களுக்கு புண்ணியம் சேரவும் வழிகாட்டும். செவ்வாய் உச்சம் பெற்றிருப்பதால் சொத்து விற்பனையில் இதுவரை இருந்த தடைகள் அகலும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். மற்றவர்கள் போற்றுமளவிற்கு வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும் மாதமிது. இராகு- கேதுக்களுக்கு பரிகாரம் செய்வதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம். தனாதிபதி உச்சம் பெற்றிருக்கும் இந்தநேரத்தில் தனவரவு அதிகமாகி, சேமிப்பை உயர்த்தும். நண்பர்களின் ஒத்துழைப்போடு பொதுநலத்தில் அக்கறை காட்டுவீர்கள். உச்சசனி உங்களுக்கு புதிய திருப்பங்களையும் புதிய பொறுப்புக்களையும் வரவழைத்துக் கொடுக்கும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 24 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியிலேயே 7,10-க்கு அதிபதியான புதன் சஞ்சரிக்கப் போவதால் இடமாற்றம், ஊர்மாற்றம், வீடுமாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக் கும். பழைய தொழிலில் இருந்து விடு பட்டு புதிய தொழில் தொடங்குவதற் கான ஆயத்த வேலைகளை மேற்கொள்வீர்கள். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

**கவனத்துடன் இருக்க வேண்டிய நேரம்!**

ஜனவரி 5 ஆம் திகதி உங்கள் இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகைவனாகும். எனவே, திடீர் திருப்பங்களும் விரயங்களும் ஒரு சிலருக்கு ஏற்படலாம். முடிவடைவதுபோல இருந்த காரியம் கடைசி நேரத்தில் கைநழுவிப் போகலாம். இக்காலத்தில் இறைவழிபாடு உங்களுக்கு அதிகம் தேவை. குறிப்பாக அம்பிகை வழிபாடும் குருதட்சிணாமூர்த்தி வழிபாடும் குதூகலத்தை வரவழைத்துக்கொடுக்கும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 9 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 7, 10- க்கு அதிபதியான புதன் 2 இல் சஞ்சரிக்கும் போது தனவரவு தாராளமாக வந்து சேரும். தொழில் துறையில் எதிர் பார்த்தபடி இலாபம் கிடைக்கும. பயணங்களால் பலன் உண்டு. கூட்டு முயற்சிகளில் மாற்றம் செய்வீர்கள். தனித்து இயங்கும் ஆற்றல் கைகூடி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நேரமிது. இம்மாதம் சனீஸ்வர வழிபாடும் ஆதியந்த பிரபு வழிபாடும் சந்தோஷத்தை வழங்கும்.

இம்மாதம் வளர்ச்சி கூடும். வசந்த காலம் உருவாக வாய்ப்பு வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாமா? என்ற சிந்தனை குடும்ப உறுப்பினர்களுக்கு உருவாகும். இடம், பூமியால் கிடைத்த இலாபத்தைக் கொண்டு வீடு கட்டுவோமா? அல்லது பிள்ளைகளின் திருமணத்தை முடிப்போமா என்று சிந்திப்பீர்கள். மாதத்தின் மையப்பகுதியில் விலை உயர்ந்த பொருட் களை வாங்கும் வாய்ப்பு கிட்டும். அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். பஞ்சம கேதுவிற்கு பரிகாரமாக கேது பரிகாரம் செய்வது நல்லது.

## மற்றவர்கள் போற்றுமளவிற்கு உங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள்

# சிவல்புரி சிங்காரம்

**உத்திராடம் 2,3,4, ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்!**
**கொஞ்சநேரம் பேசினாலும் நெஞ்சத்தில் பதிந்துகொள்ளும் விதம்பேசும் மகர இராசி நேயர்களே!**

மார்கழிமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், குழப்பங்கள் அகலும். குதூகலம்கூடும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். கடவுள் பற்று அதிகமாக இருப்பதால் பரிகாரங்களின்மூலம் நீங்கள் பலன்களைத் தேடிக்கொள்வீர்கள்.

ஒருசிலர் விற்க நேரிடலாம். அப்படி விற்க நேரிடுப வர்கள் விற்ற தொகையை செலவழித்து விடாமல் அதற்று வேறு ஒரு சொத்துக் களை வாங்கி வைத்துக் கொள்வது நல்லது.

சந்திர மங்கள யோகத்தோடு மாதம் பிறப்பதால், சராசரி மனிதராக இருந்தாலும்கூட சாதனையாளராக மாற வாய்ப்புகள் கைகூடிவரும். வீட்டு பராமரிப்பு செலவுகளை மேற்கொள்வீர்கள். கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பு உருவாகலாம். சமூகத்தில் உயர்ந்த மனிதர்களின் தொடர்பால் சந்தோசமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழிபிறக்கும். குருவின் வக்ர இயக்கம் உங்களுக்கு நன்மையை வழங்கும். விரயாதிபதி வக்ரம் பெறும்போது விரயத்திற்கேற்ற தனலாபம் முன்னதாகவே வந்துசேரும். குரு பரிகாரமும் ராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப தெய்வ வழிபாடுகளையும் அனுகூலம்தரும்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நீங்கள் தீட்டிய திட்டங்களை முடித்துக்கொடுப்பார். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஒருசிலருக்கு ஊதிய உயர்வோடு இலாகா மாற்றமும் வந்துசேரும். செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். அந்நிய தேச பயணம் எண்ணியபடி கைகூடும்.

**பிள்ளைகளால்விரயம்ஏற்படும் நேரம்**

ஜனவரி 5 ஆம் திகதி தனசு இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 5, 10 இற்கு அதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் விரயம் ஏற்படலாம். புத்திரகாரகன், குருவும் வக்ரம் பெற்றிருக்கும் இந்தநேரத்தில் பிள்ளைகளை உங்களின் நேரடிப் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. தொழிலில் கூட்டாளிகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்களா? என்பது சந்தேகம் தான். விழிப்புணர்ச்சி அதிகம் தேவை.




சூழ்நிலை உருவாகலாம். வங்கிகளின் ஒத்துழைப்போடு வீடுகட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். நாடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். நல்லவர்களின் தொடர்பால்வரும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் பிள்ளைகளால் பிரச்சினை வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் உங்களின் நேரடிக் கண்காணிப்பு தேவை. ஏமாற்றங்களை ஒருசிலர் சந்திக்க நேரிடலாம். கணவன்--மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும் என்றாலும் அப்போதைக்கப்போது கேதுவின் ஆதிக்கத்தால் சச்சரவுகள் தலைதூக்கலாம். சுகஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே, சர்ப்ப பரிகாரம் செய்து கொள்வது சுகமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். (தொடரும்)

## விபரீத இராஜயோகம் செயற்படப்போகிறது; திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிட்டும்

இராசிநாதன் உச்சம் பெற்றிருப்பதால், உடல் நலம் சீராகும். வைத்திய செலவுகள் குறையும். காரியவெற்றிக்கு [illegible]வினர்கள் பின்னணியாக இ[illegible] உதவிக்கரம் நீட்டுவர். 4-இ[illegible]கேது சஞ்சரிப்பதால் தாய்வழி ஆதரவு குறையலாம். பெற்றோர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. இடம், பூமி வாங்கியவற்றை நாளில் செய்தால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

டிசெம்பர் 24 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறது. இதன் விளைவாக விபரீத இராஜ யோகம் செயற்படப்போகிறது. திட்டமிடாது செய[illegible] வெற்றி கிடைக்[illegible]

அதேநேரத்தில் இலாபாதிபதி உச்சம் பெற்றிருப்பதால் பழைய பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்து இணைய வாய்ப்பு உண்டு.

**மகர புதனின் சஞ்சாரம்**

ஜனவரி 9 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் [illegible] பழைய கடன்களை [illegible] புதிய கடன்களை வாங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் தேவைகளுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்

## அபிவிருத்திக்குழு கூட்டத்தில் அமைச்சர் றிசாத் தெரிவிப்பு




(மன்னார்)

வன்னி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மக்களின் விருப்பத்தின் படியே தெரிவு செய்யப்பட வேண்டும். மக்களை புறந்தள்ளி எந்தத் தீர்மானங்களையும் எடுக்க முடியாதென்று வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வன்னி வசந்தம் எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் உட்பட மாகாண அமைச்சின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் இதன் போது சமுகமளித்திருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் சகல பிரதேசங்களும் எவ்வித பாகுபாடுகளுமின்றி அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதில் இனம், மதம் பார்ப்பதில்லை. எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு முன்னுரிமையளித்து அபிவிருத்திகளை செய்கின்றோம்.

பிரதேசத்தில் அபிவிருத்திகளை செய்கின்ற போது மக்களின் தேவைக்கு முன்னுரிமையளித்து சகல மக்கள் பிரதிநிதிகள் கருத்துக்களையும் உள்வாங்கி திட்டங்களை தயாரிக்க வேண்டும்.


இந்த மாவட்டம் இன்று அமைதியாக காணப்படுகின்றது. மீண்டும் பயங்கரவாதத்தை தோற்றுவிப்பது சிலரின் தேவையாகவுள்ளது. இதற்கு இடம்கொடுக்க முடியாது.

இந்த நாட்டின் ஜனாதிபதி வன்னி மாவட்டத்துக்கான நிதிகளை நாம் கேட்கின்ற போதெல்லாம் ஒதுக்கி தருகிறார் என்பதை இங்குள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இம் மாவட்டத்தின் மின்சாரம், சுகாதாரம், பாதை, கல்வி, மக்களின் வாழ்வாதார திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நாம் நிதிகளை வழங்கி மாவட்டத்தை முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச் செல்கின்றோம்.

எனவே, சகலரும் மக்களுக்கான இந்த அபிவிருத்திகளை முன்னெடுக்க உதவிகளை வழங்குங்கள் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். (அ-2)

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்) அச்சுவேலி வளலாயை பிறப்பிடமாகவும் வவுனியா வில் வசித்துவருபவருமான நடராசா திருஞானசம்பந்தர் நீதி அமைச்சினால் தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக கடந்த 10 ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா முக்பா முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர்வளலாய்நடராசா-பூமணிதம்பதியினரின் புதல்வரும் யாழ்.அடைக்கலநாயகி ம.வி., இடைக்காடு இந்துக்கல்லூரி, வல்வை சிதம்பரக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார்.

1971 ஆம் ஆண்டில் அரச சேவையில் எழுதுநராக இணைந்தார். 1994 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டு பத்து ஆண்டுகள் வன்னி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும் ஐந்து ஆண்டுகள் மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலாளராகவும் இறுதி மூன்று ஆண்டுகள் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவராவார். (அ)

# அனைத்து மக்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதே எனது விருப்பம்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

படைபலத்தை வைத்துக் கொண்டு எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. அரசியல் ரீதியான அணுகுமுறைகள் மூலமே பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வினை எட்டமுடியும் என கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கிளிநொச்சி, பூநகரி, இரணைமாதா நகரில் கடலுணவு பதனிடல் நிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் நிலவுகின்ற நீண்ட கால பிரச்சினைக்கு நல்லதொரு அரசியல் வழிமுறைகள் மூலமே நல்ல தீர்வினை காண வேண்டும். லிபியாவில் ஏற்பட்ட பிரச்சினையில் அந்நாட்டு படைகளினால் லிபியத்தலைவர் கடாபியினை காப்பாற்ற முடியாமல் போனமையினையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இனவாதங்கள் பேசிக்கொண்டு மீண்டும் மீண்டும் மக்களையும் நாட்டினையும் அழிவுக்கு இட்டுச் செல்வது நல்லதல்ல. தான் இனவாதத்திற்கு எதிரானவன் என்பதோடு இனவாதத்திற்கு எதிராகவே குரல் கொடுத்தும் வந்தவன் என்ற காரணத்தினாலும் இந்நாட்டில் காணப்பட்ட இரண்டு இனவாதிகளின் குண்டுகளை இன்றும் உடலில் சுமந்து கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சிங்கள இனவாதிகளான ஜே.வி.பிகளின் குண்டினையும் தமிழ் இனவாதிகளான புலிகளின் குண்டினையும் தனது உடல் தாங்கிக் கொண்டிருப்பதாகவும் இனவாதம் எதற்கும் சிறந்த வழியல்ல எனவும் தென்பகுதியிலும் வட பகுதியிலும் காணப்பட்ட இனவாதங்கள் காரணமாகவே இந்நாட்டில் பலர் உயிரிழந்துள்ளனர் என தெரிவித்தார்.

எனவே நான் எப்பொழுதும் இனவாதத்தினை முற்றாக எதிர்க்கின்றேன். அதற்கு எதிராகவும் செயற்படுகின்றேன். இதன் காரணமாக நான் சிங்கள மக்களுக்கு எதிராக செயற்படுவதாக தெற்கிலுள்ள சிலர் கூறி வருகின்றனர். இருப்பினும் நான் இவற்றுக்களை ஒருபோதும் கண்டுகொள்ளப் போவதில்லை. அனைத்து மக்களும் நிம்மதியான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே தமது விருப்பம் எனவும் குறிப்பிட்டார். (அ-2)

## இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்து

# வடக்கு மாகாணத்தில் நியமனம் பெற்றோர் விபரம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்த வடக்கு மாகாணத்தை சேர்ந்த 17 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பாடரீதியாக கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட இவர்கள் உடனடியாக பதவிகளை பொறுப்பேற்கும் வகையில் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**பொதுஆளணி**

எஸ்.காண்டீபன், திருமதி ஜே.சுகந்தி, எஸ்.மதியழகன், லி.தர்மலிங்கம், என்.கந்ததாசன், திருமதி என்.பரமேஸ்வரன், திருமதி யு.விவேகானந்தராசா

**கைப்பணி**

எஸ்.தேவகுமாரன்

**சித்திரம்**

ரி.மயூரன், ஆர்.நிர்மலரஞ்சன்

**தகவல் தொழில்நுட்பம்**

திருமதி ஏ.கிருஷ்ணகோபி, எஸ்.தர்மசீலன், ரி.தேவதாஸ்

**வர்த்தகம்**

ஏ.சுபாகரன், எஸ்.பிரகாசன்

**கீழைத்தேய இசை**

எஸ்.சிவசிவா

**உடற்கல்வி**

திருமதி கே.பிரதீபா

கணனியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக நேற்றைய வலம்புரியில் தவறுதலான பெயர் விபரங்கள் பிரசுரமாக்கப்பட்டுள்ளன. (அ)

# இலஞ்ச ஊழல் ஒழிப்புக் கூட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும்

## இ.ஊ.ஒ ஆணைக்குழு தெரிவிப்பு

இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சட்டங்களில் திருத்தம் கொண்டுவரும் நோக்கில் குழுவொன்றை நியமித்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1954 ஆம் ஆண்டு இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான சட்டம் முதன்முதலாக அறிமுகம் செய்யப்பட்டது.

தனியார் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்த சட்டத்தில் சந்தர்ப்பம் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே தனியார் துறையில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை தடுக்கும் நோக்கில் சட்டதிருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (அ-2)

# றிசானா நபீக்கிற்கு மரண தண்டனை?

(கொழும்பு)

குழந்தை ஒன்று உயிரிழந்தமை தொடர்பாக சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த றிசானா நபீக் இறந்த குழந்தையின் குடும்பத்தினரின் தீர்மானத்திற்கு அமைய அவர் தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்படலாம் என சவுதி அரேபியாவுக்கு விஜயம் செய்து திரும்பிய இலங்கை சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

றிசானாவை விடுதலை செய்யும் முனைப்புக்களை மேற்கொள்ளும் நோக்கில் அங்கு சென்ற சட்டமா அதிபர் அந்த நாட்டின் சட்டமா அதிபர், ஆளுநர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இறந்த குழந்தையின் பெற்றோரை சந்தித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்ததாகவும் இந்த விடயத்தில் வெளியார் தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லை எனவும் சட்டமா அதிபர் கூறியுள்ளார்.

தனது விஜயத்தின் போது றிசானா நபீக்கை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ள சட்டமா அதிபர் மனிதவுரிமை அமைப்புக்களுக்கு தெரியாமல் அவர் தூக்கிலிடப்படும் சந்தர்ப்பம் இருப்பதாக தான் உணர்ந்து கொண்டதாகவும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் அடுத்த சில தினங்கள் மிகவும் தீர்மானகரமானது என கூறியுள்ள சட்டமா அதிபர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைய சவுதி மன்னர் இந்த பிரச்சினையில் தனிப்பட்ட ரீதியில் தலையிட்ட போதிலும் உயிரிழந்த குழந்தையின் பெற்றோர் தமது தீர்மானத்தில் உறுதியாக இருப்பதால் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது நிச்சயமாக இருக்கும் என தான் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE MAYA CALENDAR

மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு

# உலகம் அழியுமா? அழியாதா?

# புலப்படும் பிரம்மிப்புகள்!

-ராஜ்சிவா- 17


### வைமானிக சாஸ்திரம்- விமான சாஸ்திரம்

அறிஞர்கள் இந்த வைமானிக சாஸ்திரத்தை புகழோ புகழென்று புகழ்கின்றனர். புராதன அறிவியல் பற்றி பேசும் ஒவ்வொரு இடங்களிலும் இதனை முன்வைத்து சிலாகிக்கின்றனர். எமக்குத் தெரியாதது, அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இதில் ஒருபடி மேலே போய், இரண்டாம் உலகப்போரின் சமயங்களில் ஹிட்லரின் விஞ்ஞானிகள் மேற்படி வைமானிக சாஸ்திரத்தை மையமாக வைத்து பறக்கும் தட்டு ஒன்றைத் தயாரித்து பறக்கவிட்ட செய்தியும் உண்டு. பறக்கும் தட்டை ஜேர்மன் தயாரித்தது வதந்தியல்ல. மிக நிச்சயமான உண்மை.

### நாஸ்கா இனத்தவர்களும் அவர்களது மிகப்பெரும் மனித சிலைகளும்

இப்போ இங்கு சொல்லப்போவது சாதாரண வரலாற்றுச் சம்பவம் அல்ல. பெரும் மர்மத்தை தன்னுள் அடக்கிய சம்பவம் அது. மாயன்களின் பிரதேத்திற்கு சற்றுக் கீழே வாழ்ந்த நாஸ்கா எனும் இனத்தவர் பற்றி முன்னரே இங்கு கூறயுள்ளோம். அவர்களும் தென்னமெரிக்காவைச் சேர்ந்த பெரு நாட்டில் வாழ்ந்தவர்கள்தான். அந்த பெரு நாட்டிற்கு கீழே இருக்கும் நாடுதான் சிலி நாடு. நீண்டதொரு நேர்கோடுபோல மேலிருந்து கீழ்நோக்கி பரவியிருக்கும் ஒரு நாடு. இந்த நாட்டிற்கு சொந்தமான மேற்குப்பகுதி கடலில் அமைந்திருக்கும் ஒரு சிறிய தீவின் பெயர் ஈஸ்ரர் தீவு என்பதாகும். ஈஸ்ரர் தீவு சிலி நாட்டிற்கு சொந்தமான தீவுதான் என்றாலும், கடல் நடுவே சிலியிலிருந்து வெகுதூரத்தில் மிகத் தனியாக இருக்கிறது. முக்கோண வடிவத்தில் இருக்கும் இந்தத் தீவில் உலகத்தையே அதிர வைத்துக் கொண்டிருக்கும் அதிசயம் ஒன்று இருக்கிறது.

மனிதர்களே வாழ முடியாத அளவு தூரத்தில் கடலின் நடவே இருக்கும் இந்தத் தீவைக் கண்டவர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். அத்தீவைச் சுற்றி வரிசையாக மிகப்பெரிய மனிதர்கள் கடலைப் பார்த்தபடி நின்றதுதான் பிரம்மிப்பிற்கு காரணம்.




ஈஸ்ரர் தீவு

ஒவ்வொரு மனிதரும் இராட்சதர்கள் போல 2 மீற்றர்கள் உயரத்திலிருந்து 10 மீற்றர்கள் உயரம்வரை இருந்தார்கள். உண்மையில் அவர்கள் மனிதர்களல்ல. யாரோ செய்த மனிதச் சிலைகள். அந்தத் தீவைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்த இந்தச் சிலைகள் ஒவ்வொன்றும் பல தொன்கள் எடையுள்ளவையாக இருந்தன. சில சிலைகள் 80 தொன்கள் வரை எடையுள்ளதாகவும் இருக்கின்றன. யார் செய்தார்கள்? இந்தச் சிலைகளை ஏன் செய்தார்கள்? யாருக்கும் தெரியவில்லை.

இந்தச் சிலைகள் மோவாய் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. கி.பி.300 ஆண்டுகளில் இவை செய்யப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியில் கணித்திருந்தாலும் சரியான கணக்கு தெரியவில்லை. இந்தச் சிலைகளை ஏன் அந்தத் தீவில் வாழ்ந்த மக்கள் உருவாக்கினார்கள் ? எதற்காக தீவைச் சுற்றி அவற்றை அடுக்கி வைத்திருக்கிறார்கள்? என்ற கேள்விகளுக்கு இன்றுவரை எவரிடமும் பதிலில்லை. இதற்கும் வேற்றுக் கிரகவாசிகளான ஏலியன்களுக்கும் சம்பந்தம் உண்டா என்றும் தெரியவில்லை.

இந்தச்சிலைகளை எப்படிச் செதுக்கினார்கள்? செதுக்கிய இந்தச்சிலைகளை எப்படி தீவின் மையப்பகுதியிலிருந்து 16 கி.மீற்றர் தூரத்தில் இருக்கும் கரைக்கு நகர்த்தி வந்தார்கள். அப்படி நகர்த்தி வந்ததை எப்படி நிமிர்த்தினார்கள்? என்பவையெல்லாமே ஆச்சரியங்களாகவும் கேள்விகளாகவும் எம்முன்னே நிற்கின்றன. அந்தத் தீவிலுள்ள மரங்களை வெட்டியே இவற்றை கடற்கரை வரை நகர்த்தியிருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனாலும், எந்தக் கருவிகளும் இல்லாமல், இப்படி நகர்த்தி, நிமிர்த்தியதும் அவற்றை உருவாக்கியதும் மனிதனால் முடியாத ஒரு அசாத்திய செயல் என்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

அந்தத் தீவில் வெட்டப்பட்டு பாதியில் விடப்பட்ட சிலையொன்றைக் கண்டால் அசந்து விடுவீர்கள். அது 200 தொன் நிறைக்கு அதிகமாகவும் மிக நீளமாகவும் இருக்கிறது. ஒரு வேளை அந்தச்சிலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், அதனை எப்படி உயரத்தூக்கியிருப்பார்கள்? எப்படி நகர்த்தியிருப்பார்கள்? எதற்கும் விடையில்லை.

மோவாய் என்று சொல்லப்படும் இந்தச் சிலைகள் தீவைச் சுற்றி நிறுத்தப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், தீவு முழுக்க நூற்றுக் கணக்கில் பாகங்களாய் சிதறியதுபோல போடப்பட்டுள்ளன. தலைகள், உடல்கள் என எங்கும் மோவாய்கள்தான். அதிகம் ஏன்? கடலுக்குள்ளும் மோவாய்கள் கிடக்கின்றன.

இந்தச்சிலைகள் யாருக்கு என்ன செய்திகளைச் சொல்கின்றன. இதை மனிதர்கள் செய்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும் இவ்வளவு சிரமப்பட்டு இவற்றைச் செய்ய வேண்டிய காரணம் என்ன?

### மாயன்களின் வேதப்புத்தகம்

மாயன்களின் வேதப்புத்தகமான பொபோல் வூ சொல்லும் கதையைச் சொல்ல வேண்டும் பொபோல் வூ எனும் நூல் சொல்லும் கதையில் பூமி, சூரியன், சூரியக் குடும்பம், பால்வெளி மண்டலம் என்று அனைத்தைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அத்தோடு பால்வெளி மண்டலத்தில் இருக்கும் கருமையான இடம் பற்றியும் சொல்லியிருக்கிறது. அந்தக் கருமை இடத்திற்கு அருகே சூரியன் சென்றால் சூரியனும் உலகமும் அழிந்துவிடும் என்றும் சொல்கிறது அந்த வேதம்.

### நவீன விஞ்ஞானத்தின் கூறுவது


ஆனால், நவீன விஞ்ஞானத்தின் மூலம் ஆராய்ந்ததில் மாயன்கள் சொல்லியபடி



நாஸ்கா இனத்தவரின் சிலையின் தோற்றம்



சிதறிக்கிடக்கும் சிலைகள்



கடலுக்கு அடியில் கிடக்கும் சிலைகள்

ஒரு கருப்பு இடத்தை நோக்கி சூரியன் நகர்வது உண்மைதான், என்றாலும் அந்தக் கருப்பு இடம் ஒரு திடமான இடமல்ல. அதாவது ஒரு நட்சத்திரம்போலவோ, கோள் போலவோ திடமான இடமல்ல. பால்வெளி மண்டலக் கோள்கள், நட்சத்திரங்கள் என்னும் திடமானவை, இருப்பது போலத் தூசிகளும் வாயுக்களும் ஒன்று சேர்ந்து கோடான கோடி கி.மீற்றர் பரப்பில் பரவி, பல இடங்களில் இருட்டுப்போல இருக்கின்றன. பாக்கும்போது மிகப் பெரிய இருண்ட பகுதிபோல அவை தோன்றினாலும் அவை வெறும் வாயுக்களும் தூசிகளும் தான். திடமான நட்சத்திரங்கள், கோள்களுக்கு அவற்றின் மையப்பகுதியில் ஈர்ப்பு விசை மிக அதிகமாக இருக்கும். ஆனால், இப்படி பரவியிருக்கும் இந்தக் கருமையான தூசிகளுக்கும் ஈர்ப்புவிசை இருந்தாலும் அவை மையப்பகுதியைக் கொண்டிருக்காமல் இருப்பதால் பெரியளவில் ஈர்ப்பு விசையைக் கொண்டிருக்கமுடியாது. இப் படி ஒரு கருமையான இடம் எமது சூரியன் பிரயாணம் செய்யும் இடத்திற்கு அருகில் உண்டு என்பது உண்மைதான். அதைத் தான் மாயன்கள் ஷிபால்பா என்னும் மரணக் கடவுளின் இடம் என்று அழைத்தார்கள்.

மாயன்கள் சொல்லியதுபோல சூரியனுக்கு எந்தத் தீங்கும் வரமுடியாது. அதாவது, சூரியனைக் கவர்ந்திழுத்து அழிக்கல்ல ஈர்ப்புசக்தி அந்தக் கருப்புப் பள்ளத்திற்கு கிடையாது. இங்கு *பிளாக் ஹோல்* என்பதற்கும் இதற்கும் வித்தியாசத்தை நாம்புரிந்துகொள்ள வேண்டும். *பிளாக் ஹோல்* என்பதுதான் பிரபஞ்சத்திலேயே ஈர்ப்புவிசை அதிகமான ஒன்று. ஆனால், இது அதுவல்ல. பால்வெளி மண்டலத்தின் மையப்பகுதியில் ஒரு *பிளாக்ஹோல்* இருப்பது கண்டுபிடிக் கப்பட்டிருக்கிறது. ஆனால் அது எமது *பூமியிலிருந்து 50 ஆயிரம் ஒளி வருடங்கள் தூரத்தில் இருக்கிறது.* மிகமிக, மிகத் தூரத்தில் அது உள்ளது. எனவே சூரியன் அழியாது என்பதில் நாம் திடமாக இருக்கலாம்.

சூரியன் அழியாது என்றதும் எம்முன் எஞ்சியிருப்பது பூமியன் அழிவு மட்டும் தான். பூமியின் அழிவு என்பதிலும் இரண்டு விதமான அழிவுகள் உண்டு. அதில் முதலாவது, பூமியுடன் ஏதாவது மோதுவதால் பூமி அழிவதென்பதாகும். இதுவரை நாம் பார்த்ததில் நிபிரு அல்லது பிளானெற் எக்ஸ் என்று அழைக்கப்படும் ஒரு கோள் பூமிக்கு அருகே வரலாம் என்பது முக்கியமானது. இந்த நிபிரு என்ற ஒன்று இருப்பதை நாசா மறுக்கிறது. அப்படி ஒருகோள் இருந்தால் அது இப்போதே விஞ்ஞானிகளின் கண்களுக்கு அகப்பட்டிருக்கவேண்டும் என்கிறார்கள். அந்த நிபிருவின் வேகம் மிகமிக அதிகம் என்பதால் அது பூமியை அண்மிப்பதற்கு மிகச்சிறிய காலம்தான் தேவை எனவும் தற்போது அது எமது கண்ணுக்குத் தென்படாத தூரத்தில் இருப்பதாகவும் நாசாவை எதிர்ப்பவர்கள் சொல்கிறார்கள். அத்தோடு அது ஒரு கருமையான கோள் என்றும் பிரபஞ்சத்தில் ஒளிபடாத கருமையான எதுவுமே தெரிவதற்கு சாத்தியம் குறைவு என்றும் சொல்கிறார்கள்.

எப்படிப்பார்த்தாலும் இந்த நிபிரு என்ற ஒன்று இருப்பதற்கு 50% சாத்தியங்கள் தான் இருப்பதாக நாம் எடுக்கவேண்டியுள்ளது. அப்படி அது உண்மையாகவே இருக்கும் பட்சத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்குப்பின்னர் அது நிச்சயம் நமக்கு தெரியத் தொடங்கவேண்டும். எனவே ஆகஸ்ட் மாதம் வரை நாம் காத்திருக்கலாம். அப்போதும் நிபிரு எமக்கு தெரியாத பட்சத்தில் அந்தப் பயத்திலிருந்து நாம் விலகிக் கொள்ளலாம்.

இதற்கு அடுத்ததாகச் சொல்லப்படும்- பூமியை நோக்கிய மோதல் என்றால், விண்கற்கள்தான். உண்மையில் இது மிகப் பெரிய ஆபத்தான ஒரு விடயமும்கூட. பூமி விண்கல் தாக்கி அழிவதற்கு நூறு விகிதம் சாத்தியங்கள் உண்டு. ஆனால், அது எப்போது என்பது தான் கேள்வி. பூமியை நோக்கி வந்து தாக்கக் கூடிய விண்கற்கள் எமது சூரியக் குடும்பத்திலேயே, பல்லாயிரக்கணக்காக இருக்கின்றன. அவற்றில் இதுவரை கணித்ததின்படி ஆயிரம் விண்கற்கள் பூமியை ஒட்டுமொத்தமாக அழிக்கும் அளவு பெரியவை. இவை போல ஒன்று தாக்கித்தான் முன்னர் இருந்த டைனசோர்கள் எல்லாம் அழிந்தன. அந்த நேரத்திலும் பூமி முழுமையாக அழிந்தது. இப்படிப் பூமியை ஒட்டுமொத்தமாக அழிக்கக் கூடிய ஆயிரம் விண்கற்கள் விண்வெளியில் வலம்வருகின்றன. 100 மீற்றர் பருமனுள்ள விண்கல் ஒன்றே போதுமானது பூமியை அழிக்க. ஆனால், இவற்றில் பல ஒரு உதைபந்தாட்ட மைதானத்தை விடப் பெரியன.

உலகத்தில் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள விஞ்ஞானிகள் அதனைவரும் ஒரு அட்டவணை போட்டு, இந்த ஆயிரம் விண்கற்களில் ஒவ்வொரு கற்களையும் தனித்தனியே, தினமும் அவதானித்து வருகின்றனர். ஏதாவது ஒரு விண்கல்லின் திசையாவது பூமியை நோக்கித் திரும்பும் பட்சத்தில் அவர்கள் உடன் அறிவிக்கத் தயாராக இருக்கின்றனர். ஆனால், டிசெம்பர் 21 ஆம் திகதியிலோ பூமியை வந்து தாக்கக்கூடியதாக எந்த விண்கல்லும் இல்லை என விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

*(தொடரும்)*



ஈஸ்ரர் தீவின் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட மிகப்பெரும் சிலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று மாதங்கள் நிறைவடைந்த குழந்தைக்கு கொடுக்கும் உணவுகள்

குழந்தைக்கு நான்கு மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே போதுமானது. குழந்தைக்கு மூன்று மாதம் முடிவடைந்து நான்கு மாதம் ஆகின்றது என்றால் மாத்திரம் குழந்தைகளுக்கான மாப்பாலை அல்லது பசுப்பாலை



ஊட்டுங்கள்.

தாய்ப்பால் எத்தனை தடவை ஊட்டுவது, மாப்பால் எத்தனை தடவை ஊட்டுவது என்று கணக்கு வைக்காதீர்கள். ஒவ்வொரு நேரமும் தாய்ப்பாலையே ஊட்டுங்கள். அது போதாவிட்டால் மாத்திரம் தேவைக்கு ஏற்ப மாப்பாலை அல்லது பசுப்பாலை கொடுக்க வேண்டும். இப்படி செய்வதன் மூலம் தாய்ப்பால் சுரப்பதை குறையாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

### பழச்சாறு

குழந்தைகளுக்கு மூன்று மாதம் நிறைந்து விட்டது என்றால் நான்கு மாதத்தில் நீங்கள் பழச்சாற்றை அறிமுகப்படுத்தலாம். முதலில் தோடம்பழச்சாறு கொடுக்கலாம். உடனே வெட்டிப்பிழிந்த தோடம்பழச்சாற்றில் ஒரு கரண்டி மட்டும் ஆரம்பத்தில் கொடுங்கள். சீனியோ நீரோ சேர்க்கவேண்டியதில்லை. வெறும் சாறாகவே கொடுக்கலாம்.

காலை 8, 9 மணியளவில் இதைக் கொடுக்கலாம். ஒரு தேக்கரண்டியில் ஆரம்பித்து படிப்படியாக அதிகரியுங்கள். சிறிது காலத்தில் அரைப்பழத்தின் சாற்றை கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

தோடம்பழத்திற்கு பதிலாக எலுமிச்சம் பழச்சாறு கொடுக்கலாம். இதில் புளிப்பு அதிகமாக இருப்பதால் சிறிது கொதித்து ஆறிய நீரில் சீனியும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

பப்பாசிப்பழத்தையும் சாறாகக் கொடுக்கலாம். முன்பு போல ஒரு தேக்கரண்டியில் ஆரம்பித்து படிப்படியாக அதிகரிக்க வேண்டும். இரண்டு வாரங்களுக்கு பின் பப்பாசிப் பழத்தை மசித்து உண்ணக்கொடுங்கள். திராட்சைப்பழங்களும் உங்கள் குழந்தைக்கு கொடுக்க உகந்தவை.

நல்ல பழங்களாக தேர்ந்தெடுத்து நன்கு கழுவிய பின்னரே சாறாக்க வேண்டும். நசிந்து பழுதடைந்த பழங்களையும் தண்டு கழன்ற பழங்களையும் கொடுக்க வேண்டாம். வாழைப்பழமும் கொடுக்க ஏற்றது. ஏனைய பழங்களைப் போல கொடுக்கலாம்.

### பழங்கள் குளிர்மையானவையா?

பழவகைகள் குளிர்மையானவை. இருமல், சளியை ஏற்படுத்தும் என பெற்றோர் பலரும் பயப்படுவது உண்டு. இது தவறான நம்பிக்கையாகும். இவற்றுக்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. உலகின் பெரும்பாலான நாடுகளில் குழந்தைகளுக்கு முதலில் பழச்சாற்றை, பழ மசியலைத்தான் மேலதிக உணவாக கொடுக்கிறார்கள். இதனால் அக் குழந்தைகள் நோய் வாய்ப்படவில்லை. மாறாக நல்ல ஆரோக்கியமாகவே இருக்கிறார்கள்.

அத்துடன் பழ வகைகளில் நிறை விற்றமின்கள் அதாவது உயிர்ச்சத்துக்கள் இருக்கின்றன. முக்கியமாக விற்றமின் சி யும் விற்றமின் ஏ யும் நிறைய இருக்கின்றன. இவை தடிமன், காய்ச்சல் வருவதைத் தடுக்கும் ஆற்றல் கொண்டவை என்றே மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

அத்துடன் பழ வகைகளில் நிறை நார்ப்பொருளும் உள்ளது. இது மலச்சிக்கல் ஏற்படாது தடுத்து குழந்தைக்கு சுலபமாக மலம் வெறியேறுவதை உறுதிப்படுத்தும். எனவே, எந்தவித தயக்கமும் இன்றி பழ வகைகளை குழந்தைகளுக்கு கொடுக்கலாம்.




### வேறு கெட்டியான உணவுகள்.

நான்கு மாதத்தில் குழந்தையின் சத்துணவு தேவை அதிகரிக்கின்றது. தாய்ப்பால் மாத்திரம் போதுமானதல்ல. எனவேதான் மேலதிக உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், குழந்தைகளுக்கு மேலதிக உணவு என்பது ஒரு புதிய அனுபவம். குழந்தை அதை விரும்பி ஏற்றுக் கொள்ளும் வண்ணம் சிறிய அளவில் ஆரம்பித்து சிறிது சிறிதாக அதிகரியுங்கள். புதிய உணவை ஒரு வாரம் வரை தொடர்ந்து கொடுத்து குழந்தை அதற்கு பழக்கப்பட்ட பின் இன்னுமொரு உணவை ஆரம்பியுங்கள். திட உணவுகளை ஆரம்பிக்கும் நேரத்தில் நீங்கள் எவ்வளவு ஊட்டுகின்றீர்கள் என்பது முக்கியமானது அல்ல. அதை குழந்தை எவ்வளவு தூரம் விரும்புகின்றான் என்பதே முக்கியமானதாகும்.

### அரிசிக்கஞ்சி

அரிசிக்கஞ்சி அல்லது பாயாசம் ஆரம்பத்தில் கொடுப்பதற்கு ஏற்றதாகும். எமது வழமையான உணவு சோறு என்பதால் குழந்தைகளுக்கு அரிசிக்கஞ்சியை முதலில் அறிமுகப்படுத்துவது நல்லது. முதலில் வடித்த கஞ்சியில் ஒரு அவுன்ஸ் அளவு கொடுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து பின் 3 தொடக்கம் 4 அவுன்ஸ் கஞ்சி கொடுக்கவும்.

ஆரம்பத்தில் அதில் கட்டிகள் இல்லாமல்



திரவமாக இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள். சில நாட்களின் பின்னர் சோற்றையும் நசித்து, வடித்துக் கொடுங்கள். 5 மாதமளவில் மசித்த சோற்றுடன் கலந்த கஞ்சியை வடிக்காமலே கொடுங்கள். ஆறு மாத அளவில் நன்கு கரையக் காய்ச்சிய சோற்றை நேராகவே கொடுக்கலாம்.

பாலுக்குபழகி இருந்த குழந்தை திட உணவை ஏற்க மறுத்தால் அதற்காக கவலைப்படாதீர்கள். மறுத்தால் கட்டாயப்படுத்தி ஊட்டாதீர்கள். புரிந்துணர்வோடு அணுகுங்கள். குழந்தை உணவை துப்பும் போது அச்சுவை குழந்தைக்கு பிடிக்கவில்லை என எண்ணாதீர்கள். உணவை நன்றாக மெல்லுவதாலும் நாக்கினால் ருசியை அனுபவிப்பதாலும் கூட துப்பலாம்.

உணவை உங்கள் குழந்தை விரும்பவில்லை என்பதற்காக அதிகமான இனிப்பையும் உப்பையும் சேர்த்து ஊட்ட முயலாதீர்கள். ஏனெனில் குழந்தையின் சுவை உறுப்புக்கள் வளர்ந்தோர்கள் உடையவற்றை நன்றாக வேலை செய்யக்கூடியவை. எனவே, அவர்களுக்கு அதிகப்படியான இனிப்பும் உப்பும் தேவையில்லை. ஆரோக்கியத்திற்கு ஏற்றதும் அல்ல.

### தயாரிக்கப்பட்ட தானியமா உணவுகள்

இவற்றைத் தவிர பலவிதமான தானியமா பைக்கற்றுகள் தயாரிக்கப்பட்ட உணவுகளாக விற்பனைக்கு கிடைக்கின்றன. திரிபோசா, அரச வைத்தியசாலைகளில் போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. ஏனைய பல வகை தானிய மா ஆகாரங்கள் (Cereals) விற்பனைக்கு கிடைக்கின்றன. எமது முன்னோர்கள் பொரித்த அரிசி மாவை கொடுத்தார்கள். அதையே கொடுங்கள். வாங்குவதாய் இருந்தால் நல்லதாக இருக்கிறதா என்பதை அவதானித்து வாங்குங்கள். விலை உயர்வானது தான் நல்லது என எண்ணாதீர்கள். விளம்பரத்திற்கு செலவிடப்படும் பணமும் உங்களிடம் தான் அறவிடப்படுகிறது என்பதை மறந்து விடாதீர்கள். எனவே, முக்கியமாக தரமானதாக பார்த்து வாங்குங்கள்.

ஆரம்பிக்கும் போது ஒரு தேக்கரண்டியில் ஆரம்பியுங்கள். ஒரு தேக்கரண்டி தானிய பவுடரை சிறிது சுடுநீருடன் கலந்து கொடுங்கள். அல்லது சுடு பாலுடன் கலந்து கொடுக்கலாம். குழந்தைக்கு ஆறு மாதம் ஆகும் போது ஆறு தேக்கரண்டி அளவு தானியப் பவுடரை கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஐந்து மாத அளவில் ரக்ஸ் கொடுக்க ஆரம்பியுங்கள். ஆரம்பத்தில் தூளாக்கிக் கொடுங்கள். பின் முழுமையாகவே கொடுக்கலாம். ஐந்து மாதத்தில் சூப் கொடுக்கலாம். ஆரம்பத்தில் கரட், உருளைக்கிழங்கு, வெங்காயம், தக்காளி சேர்த்து சூப் செய்யுங்கள். ஒரு வாரத்தின் பின் சூப் இலை வகைகளை சேருங்கள்.

அதன்பின் பயிற்றை, போஞ்சி, பூசணி, லீக்ஸ் போன்றவற்றையும் சேருங்கள். ஓரிரு வாரங்களின் பின் பருப்பு, பயறு, கௌவி ஆகியவற்றையும் சூப்பில் சேர்க்கலாம். மீன் அல்லது இறைச்சியை ஆறு மாதத்தின் பின் சூப்பில் சேருங்கள். ஆறு மாதமளவில் குழந்தையின் சூப்பிற்கு சுவையையும் சக்தியையும் கொடுப்பதற்காக சிறிதளவு பட்டர், மாஜரீன் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்க்கலாம். இந்நேரத்தில் பாணில் அல்லது ரக்சில் சிறிது பட்டர் அல்லது மாஜரீனை பூசிக் கொடுக்கலாம்.

# சிங்களவரான செனவிரட்னவுக்கு சிங்கப்பூருக்குள் அனுமதியில்லை

## திருப்பி அனுப்பினர் அதிகாரிகள்

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவாளரும் அவுஸ்திரேலியாவின் மனித உரிமைகள் நடவடிக்கையாளருமான இலங்கையில் பிறந்த கலாநிதி பிரைன் செனவிரட்னவை சிங்கப்பூர் அரசாங்கம் நாடு கடத்தியது.

பிரைன் செனவிரட்ன (வயது 81) மலேசியாவுக்கு செல்லும் வழியில் கடந்த வெள்ளிக்கிழமை சிங்கப்பூருக்கு சென்றிருந்தார். அங்கு மலேசியாவில் இலங்கையர்களின் அரசியல் அடைக்கலம் குறித்து இரண்டு சந்திப்புக்களை நடத்தவிருந்தார். இந்நிலையில் சிங்கப்பூரின் விமான நிலையத்தில் இறங்கிய அவர் மலேசிய நகரான ஜொஹொர் பஹ்ருக்கு தரை வழியாக செல்வதற்கு திட்டமிட்டிருந்தார்.

எனினும் சிங்கப்பூரின் அதிகாரிகள் அவரை விமான நிலையத்தில் சுமார் 4 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை நடத்தினர். பின்னர் அவரை அவுஸ்திரேலிய பிரிஸ்பேனுக்கு விமானம் மூலம் திருப்பியனுப்பினர்.

இதன்போது செனவிரட்னவிடம் குறிப்பு ஒன்றை கையளித்த சிங்கப்பூர் அதிகாரிகள் சிங்கப்பூரில் பிரவேசிப்பதற்கு அனுமதியில்லை என்று குறிப்பிட்டனர். எனினும் காரணங்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

இதனையடுத்து தமக்கு நேர்ந்த நிலை குறித்து பிரைன் செனவிரட்ன, அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மற்றும் குடிவரவு அமைச்சர் கெவின் ரூட் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

பிரைன் செனவிரட்ன 1976 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பிரஜாவுரிமையை பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முசலி பிரதேசத்தில் பயணிகள் தரிப்பிடமில்லை

## மக்கள் அந்தரிப்பு

(மன்னார்)

முசலி பிரதேசத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டும் இது வரை காலமும் பயணிகள் நலன் கருதி பேருந்து தரிப்பிடம் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, பயணிகள் நலன் கருதி பேருந்து தரிப்பிடத்தினை செய்து தருமாறு முசலி பிரதேச சபையிடமும் இது சம்பந்தமான அதிகாரிகளிடமும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நிரந்தர சமாதானத்தின் பின்பு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அனைத்து மக்களும் மீள் குடியமர்த்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த 2011 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல் நடந்த பிரதேச சபை, நிர்வாக சபை மற்றும் பிரதேச செயலகம் என்பனவற்றின் நிர்வாகம் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதியினால் சீரான முறையில் போக்குவரத்து இடம்பெறுகின்றது.

நாளாந்தம் மன்னாரிலிருந்து பயணிக்கின்ற பேருந்துகள் பொற்கேணி, வேப்பங்குளம், சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்கின்றன.

பின்பு கொழும்பு, புத்தளம் ஆகிய இடங்களுக்கு செல்கின்ற பேருந்துகள் சிலாவத்துறையினூடாக செல்கின்றன. பயணிகள் பஸ் தரிப்பிடம் இல்லாமல் கடந்த 3 வருட காலமாக மழையிலும் வெயிலிலும் சிறு பிள்ளைகளை வைத்துக் கொண்டு இருப்பதற்கு இடம் இல்லாமல் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக முசலி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்டிக்கு கல்விச் சுற்றுலா சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் நிர்க்கதி

கண்டி ஹந்தானை மலைப் பகுதிக்கு கல்வி சுற்றுலா சென்ற பல்கலைக்கழக மாணவ, மாணவியர் நிர்க்கதியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுமையான பனி மூட்டம் மற்றும் மழை காரணமாக மாணவர்கள் ஹந்தானை மலைப் பகுதியில் சிக்கியுள்ளனர். சுமார் 250 பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு சிக்கியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு நிர்க்கதியாகியுள்ளனர். மலைப் பகுதியில் சிக்கியுள்ளதாக பல்கலைக்கழக மாணவ, மாணவியர் பொலிஸாருக்கு கையடக்கத் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளனர். இதனையடுத்து இராணுவத்தினரும் இணைந்து மீட்புப் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த மலைப் பகுதியில் சுற்றுலாவுக்குச் சென்று நிர்க்கதியான நிலையில் தவித்துக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் 400 பேரை நேற்றுக் காலை இராணுவத்தினர் காப்பாற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காப்பாற்றப்பட்டவர்களில் 40 பேர் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும் சுற்றுலா சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.(அ-2)

# மாணவர் விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும்

## தொல் திருமாவளவன் வலியுறுத்து

• (கொழும்பு)

ஈழத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி விளக்கேற்றியதால் சிங்கள படையினர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தியது டன் அவர்களை வதைகளுக்குட்ப டுத்தியும் வருகிறது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநிலச் செயற்குழு, கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார். அவரது தலைமையில் சென்னை, கோயம்பேடு, விஜய் பார்க் விடுதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நிலையில் இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு ஈழ மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களை அப்பகுதிகளிலிருந்து முற்றிலுமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் இந்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-2)

# இலங்கைக்கான கடனை சீனா நிறுத்தி வைத்தது

நீர் மின்சாரத் திட்டத்துக்காக இலங்கைக்கு வழங்கவிருந்த 8.9 பில்லியன் ரூபாய்கள் கடனை சீனா நிறுத்தி வைத்துள்ளதாக தெரிய வருகின்றது.

சீனாவின் காப்புறுதி நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கம் காப்புறுதிக் கட்டணமாக செலுத்தவுள்ள 627 மில்லியன் ரூபாய்கள் செலுத்தப்படும் வரை குறித்த கடனை சீன அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ளதாக குறிப் பிடப்படுகின்றது.

சீனாவின் தேசிய மின்சாரத் துறை உபகரணக் கூட்டுத்தாபனம் அங்குள்ள வங்கி ஒன்றின் ஊடாக களனி கங்கை நீர்மின்சார திட்டத்துக்காக சுமார் 7 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க உறுதியளித்தது.

எனினும் இதனை வழங்குவதன் முன்னர் இலங்கை அரசாங்கம் குறித்த தொகையில் 7 வீதமான 627 மில்லியன் ரூபாய்களை காப்புறுதிக் கட்டணமாக சீன காப்புறுதி நிறுவனத்துக்கு செலுத்த வேண்டும் என்றும் கோரியது.

இந்நிலையில் குறித்த காப்புறுதி தொகை செலுத்தப்பட்டால் மாத்திரமே கடன்தொகையை விடுவிக்க முடியும் என்று சீன அரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது. (அ-2)

# பேருந்தும் லொறியும் மோதியதில் மூவர் பலி

## 10 பேர் காயம்

கடுவளையில் பேருந்தும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 3 பேர் பலியாகியதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் கடுவளை வெலிவிட்டவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது.

கொழும்பில் இடம்பெற்ற திருமண வீடொன்றுக்கு சென்று யட்டயநற்தோட்டைக்கு திரும்பிக் கொண்டிருந்த வான் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மற்றும் லொறி ஆகியன ஒன்றோடு ஒன்று மோதியதாலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ள தாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் கைக்குழந்தைகளும் அடங்குகின்றனர். (அ-2)




★1271-குப்லாய் கான் தனது சீனப் பேரரசின் பெயரை யுவான் என மாற்றிக் கொண்டான். யுவான் வம்சம் ஆரம்பமானது.

★1505-பெல்ஜிய மன்னன் ஜோன் IX வான் ஹோர்ன் தூக்கிலிடப்பட்டான்.

★1642-ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தில் காலடி பதித்த முதலாவது ஐரோப்பியரானார்.

★1787-நியூ ஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3 ஆவது மாநிலமாக இணைந்தது.

★1911-சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.

★1926-துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★1936-இலங்கை நவசமசமாஜக் கட்சி என்ற இடதுசாரிக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

★1941-ஹொங்கொங்கின் பிரித்தானிய ஆளுநர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து ஜப்பான் ஹொங்கொங் மீது படையெழுத்தது.

★1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் விமானப்படை விமானங்கள் சீனாவின் ஹன்கோவ் நகரில் ஜப்பானிய இராணுவத் தளத்தின் மீது குண்டுகளை வீசின.

★1961-இந்தோனேசியா டச்சு நியூ கினியை ஆக்கிரமித்தது.

★1966-சனிக்கோளின் சந்திரன் எப்பிமேத்தியஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

★1973-சோவியத் விண்கலம் சோயூஸ் 13 வலன்டீன் லேபெடெவ், பியோத்தர் கிளீமுக் ஆகியோருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★1987-லரீ வோல் தனது பேர்ள் கணனி நிரலாக்க மொழியை வெளியிட்டார்.

★1990-ஈழப்போர்: இலங்கையின் திருகோணமலை இராணுவத் தளபதி லக்கி விஜயவர்த்தனா கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

★1997- எச்.டி.எம்.எல். 4.0 வெளியிடப்பட்டது.

★1999- ஈழப்போர்: கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் தனது வலது கண்ணை இழந்தார்.

### பிறப்புக்கள்

★1822-ஆறுமுக நாவலர்,ஈழத்தின் ஆன்மீகவாதி,தமிழ் உரைநடையின் முன்னோடி (இ.1879)

★1856-ஜெ.ஜெ.தொம்சன், நோபல் பரிசு பெற்ற ஆங்கில இயற்பியலாளர் (இ.1940)

★1863-பிரான்ஸ் பேர்டினண்ட்,அவுஸ்திரேலியாவின் முடிக்குரிய இளவரசர் (இ.1914)

1878-ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (இ.1953)

1932-நா.பார்த்தசாரதி, தமிழ் எழுத்தாளர் (இ.1987)

1946-நெல்லை க.பேரன், ஈழத்து எழுத்தாளர் (இ.1991)

1948-ஸ்டீவன் ஸ்பில்பேர்க், அமெரிக்கத் திரைப்பட இயக்குநர்

### இறப்பு

1843-தோமஸ் கிரஹாம், லினடொக் பிரபு, இந்தியாவுக்கான பிரித்தானிய வைசிராய் (பி.1748)

### ஜெ.ஜெ.தொம்சன்



ஜெ.ஜெ.தொம்சன் என்று பொதுவாக அறியப்படுகின்ற சர்ஜோசப் ஜான் தொம்சன் அணுவின் அடிப்படைப் பொருளான மின்னணு எனப்படும் எலக்ட்ரானைக் கண்டுபிடித்த ஆங்கில இயற்பியலாளர் ஆவார்.

இவர் மின்சாரவியல், காந்தவியல், ஐசோடோப்புகள் குறித்து ஆய்வுகள் செய்தவர். நவீன அணு இயற்பியலின் தந்தை எனப் போற்றப்படுபவர். நிறை நிறமாலையைக் கண்டறிந்தவர். இயற்பியல் பேராசிரியராக விளங்கியது மட்டுமல்லாமல் தனது ஆய்வுகளுக்காக ஆதம்சு பரிசு மற்றும் 1906 இல் இயற்பியலுக்கான நோபல் பரிசு ஆகியவற்றைப் பெற்றவர்.

#### இளமை

.இவர் 1856 ஆம் ஆண்டு லண்டனில் மான்செசுடரில் உள்ள சீத்தம் குன்று என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர் ஸ்காட்டியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 1870 இல் மான்செசுடரில் உள்ள ஓவென்சு கல்லூரியிலும் பின் 1876 இல் ஆக்சுபோர்டில் உள்ள டிரினிடி கல்லூரியிலும் சேர்ந்து படித்தார். அங்கு மிகச் சிறப்பாகப் படித்து ஆதம்சு பரிசை வென்றார்.

1890 இல் ரோசு எலிசபெத் என்ற பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டார். இவருக்கு ஒரு மகனும் மகளும் பிறந்தனர். இவருடைய மகன் ஜார்ஜ் பேஜட்தொம்சன். மிகச் சிறந்த இயற்பியல் பேராசிரியராக விளங்கி பின்னாளில் 1937 இல் பரிசையும் வென்றார்.

#### வெளியிட்ட நூல்கள்

ஒளியின் அமைப்பு (The Structure of Light) 1907, பொருளின் துகள் கொள்கை (The Corpuscula Trheory of Matter) 1913, நேர் மின்சாரக் கதிர்கள் (Positive Rays Of Elecrticity) 1913, வேதியியலில் எலக்ட்ரான் (The electron in Chemistry) 1936, மறுசேகரிப்பும் பிரதிபலிப்புகளும் (தன் வரலாறு) (Recollection and Reflections) 1936 ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார்.

#### சிறப்புக்கள்

1908 இல் இவருக்குத் தகுதி வரிசை மதிப்பு (Order of Merit) அளிக்கப்பட்டது. 1912 இல் ஆங்கிலேயச் சங்கத்தின் தலைவரானார். றோயல் கழகத்தின் சிறப்பு உறுப்பினர் பதவியும் அதன் பின் 1916 முதல் 1920 வரை அதன் தலைவர் பதவியும் அளிக்கப்பட்டது. இவர் றோயல் ஹ்யூஜெஸ் பதக்கங்கள் (1894, 1902) வோஷிங்டன் சுமித்சோனியன் நிறுவனத்தின் ஹாட்கின்ஸ் பதக்கம் (1902), ஸ்காட் பதக்கம் (பிலாடெல்பியா- 1923) எனப் பல பதக்கங்களைப் பெற்று பெருமையடைந்தார்.

#### மறைவு

தொம்சன் பல பரிசுகள் பெற்றுச் சிறந்து விளங்கி 85 ஆண்டுகள் வாழ்ந்து 1940 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார். இங்கிலாந்தின் புகழ்பெற்ற பல மேதைகள் புதைக்கப்பட்ட வெஸ்ட்மினிஸ்டர் அப்பே என்ற இடத்தில் இவ்வுடைய உடல் அனைத்து மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தொடர்ந்தும் அதிகாரத்துவம் அதிகரித்துச் செல்லுமாயின் இங்கு வாழும் சிறுபான்மை இனங்கள் மத்தியில் குறிப்பாக தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் பிரிவினை வாதமும் தொடர்ந்துகொண்டே இருக்கும். இது விரைவில் இந்தியாவிலும் குழப்ப நிலைமையை உண்டாக்கும்.

இவ்வாறு பேராசிரியர் *குமார் டேவிட் கொழும்பு ரெலிகிறாவ்* ஊடகத்தில் எழுதிய ஆய்வுக்கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினின் கற்றலோனியாவில் நவம்பர் 25 அன்று மாகாணங்களுக்கான தேர்தல்கள் இடம்பெற்றன. கற்றலோனியா, ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திர தேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தனி நாடாகப் அங்கீகரிப்பதற்கும் இங்கு சில ஆண்டுகளில் கருத்து வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கற்றலோனியா எதிர்நோக்கும் பிரச்சினைகள் சில, ஈழம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒத்ததாகும். பிரிந்து செல்லல் விவகாரமானது உலகிலுள்ள எல்லாத் தரப்பினர்களையும் விழிப்புறச் செய்கிறது. ஈழத்தை ஒத்த சில எண்ணக் கருக்கள் இங்கு காணப்பட்டாலும், கற்றலோனியாவின் முழு எண்ணக்கருக்களும் ஈழத்தை ஒத்தது எனக் கூறமுடியாது. இங்கு பல வேறுபாடுகளும் காணப்

மாசின் இவ்வாறான நடவடிக்கைகள் சரியான நேரத்தில் வெற்றியளிக்கத் தவறுகிறது. கருத்து வாக்கெடுப்பு தொடர்பில் பெரும்பான்மையினரின் ஆதரவில் மேற்கொள்ளும் ஏமாற்றுத்தனமான நடவடிக்ககையானது, மாசுக்கான ஆதரவு வாக்கை குறைத்துள்ளது. ஆதாவது கற்றலோனியா மாநிலத்தின் நாடாளுமன்ற அவையில் காணப்படும் 135 ஆசனங்களில், முன்னர் 62 ஆசனங்களை கைப்பற்றியிருந்து மாசின் கட்சியானது, தற்போது 50 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளது.

இத்தேர்தலில் இடதுசாரிக்கட்சியும் தீவிர பிரிவனைவாத கட்சியுமான தேசிய குடியரசு இடதுசாரிக்கட்சியானது மாசின் கட்சியின் தோல்வியை சாதகமாகப் பயன்படுத்தி 21 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. இது முன்னர் 10 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. இத்தேர்தலில் போட்டியிட்ட- கருத்து வாக்கெடுப்பை ஆதரிக்கும் நான்கு கட்சிகளும் மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையை அடைந்துகொள்வதாயின் இவை நான்கும் பிரிந்துசெல்லல் என்கின்ற பொதுவான நிகழ்சித் திட்டத்தை தமது நோக்காகக் கொண்டு தமக்கிடையே ஒன்று சேரவேண்டும். இத்தேர்தலில் திரு மாஸ் முன்னரைவிட ஆதரவை இழந்துள்ளார். இவரால் கருத்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்துதல் அல்லது தனிநாட்டுக் கோரிக்கையை முன்

ஒன்று சேரும்போதே இவற்றின் நோக்கத்தை மேலும் பலப்படுத்த முடியும்

இதேபோன்றே இலங்கையை எடுத்துக்கொண்டால் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் சுதந்திரான நீதியான தேர்தல் நடத்தப்படுவதற்கான அனுமதியை ராஜபக்சாக்கள் வழங்குவார்களா? கற்றலோனியா பிரதமர் மாசின் கட்சியைப்போல, இலங்கையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப்பெற்ற கட்சியாகத் திகழ்கிறது. இலங்கையில் இராணுவ ஆதிக்கமும் ராஜபக்ச அரசாங்கத்தின் அதிகாரமும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இதுவே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முதன்மையான பிரச்சினையாக காணப்படுகிறது.

ஆனால், கற்றலோனியாவில் பிரதான பிரச்சினையானது இனம், மொழி போன்ற அடையாங்களைவிட பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. கற்றலன்கள் ஸ்பானிய மொழியையும் பேசுகிறார்கள். கத்தோலிக்க மதத்தையும் பின்பற்றுகிறார்கள். இவர்கள் ஒரே கலாச்சாரத்தை பின்பற்றும் மக்கள் கூட்டமாக காணப்படுகிறார்கள். கற்றலோனியாவானது நில அளவில் இலங்கையின் அரைவாசியாகும். இதன் சனத்தொகை 7.5 மில்லியனாகும்.

ஆனால், இலங்கையின் மொத்த தேசிய வருமானம் 60 பில்லியன் டொலர்களாகக் காணப்படும் அதே


வேறெந்த வரலாற்று ரீதியான அடையாளங்களை பாதுகாக்கின்ற நோக்கில், இது பிரிந்துசெல்ல முடியாது. இனிவரும்காலங்களில் இதன் பொருளாதாரம் ஏற்றங்கண்டால், இந்த நிலைமை மாறலாம்.

"அடுத்த நான்கு ஆண்டுகளில் நான் மக்களுடன் கலந்துரையாடி இது தொடர்பில் முடிவெடுப்பேன்" என மாஸ் அறிவித்திருந்தபோதிலும் இவரது கலந்தாலோசனையின் முடிவானது பயனற்றதாகவே காணப்படும். "நாங்கள் ஸ்பெயினின் மாகாணமாக இல்லாது ஐரோப்பிய ஒன்றியத்தில் தனிநாடாக அங்கம் பெறவேண்டும் இதுவே சிறந்த தெரிவாகும்" என பொதுமக்கள் தெரிவித்திருந்தனர்.

கற்றலோனியாவில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் தமக்கான தனிநாடு அங்கீகரிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றனர். இதனை அவர்கள் கடந்தவாரம் நடந்துமுடிந்த தேர்தலில் தமது ஆணையாக வழங்கியுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அனைத்துலக நாணய நிதியம் போன்றவற்றின் நிலைப்பாட்டைப் பார்க்கும்போது கற்றலோனியா தனி நாடாக அங்கீகரிக்கப்படுவது என்பது சாத்தியமாகாதது போலத் தோன்றுகிறது. இதேவேளை ஏற்கனவே கற்றலன் உற்பத்திகளைப் புறக்கணிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கற்றலன் மற்றும் ஸ்கொட்லாந்து

# ஸ்பெயினில் கற்றலோனியா இலங்கையில் ஈழம்



## ஒப்பிடுகிறார் பேரா.குமார் டேவிட்


படுகின்றன.

கற்றலோனியாவைப் பொறுத்தளவில் இங்கு உள்நாட்டு யுத்தம் என்பது காணப்படவில்லை. ஸ்பெயினில் வாழும் ஏனைய இனத்தவர்களுக்கும் கற்றலேனியா மக்களுக்கும் இடையில் விரோதம் நிலவவில்லை. இங்கு தீவிரவாத நடவடிக்கைககளுக்கு இடமில்லை. தீவிரவாதம் என்பது இங்கு செயற்படவில்லை. கற்றலோனியாவில் இடம்பெறும் தேர்தல்களும் பரப்புரைகளும் நீதியான முறையிலும் அமைதியாகவும் நடாத்தப்படுகின்றன. இவை ஈழத்தைவிட கற்றலோனியாவில் காணப்படும் மிகப் பெரிய வேறுபாடுகளாகும்.

கற்றலோனியாவை தனிநாடாக அங்கீகரிப்பது தொடர்பில் விவாதங்களும் பரப்புரைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மாகாணத் தேர்தல்களை நடத்துமாறு இரு ஆண்டுகளுக்கு முன்னர் கற்றலன் மாகாண பிரதமரும் கற்றலன் ஒருங்கிணைப்பு மற்றும் ஒற்றுமைக் கட்சியின் தலைவருமான ஆதுர் மாஸ் கோரியிருந்தார். தன்து மக்களிடம் இது தொடர்பில் கருத்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான ஆணையை வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்பெயினின் தலைநகரமான மட்றிட்டில் செயற்படும் தேசிய அரசாங்கத்தின் பிரதமரான மரியானா ராஜொய் மற்றும் இவரது மக்கள் கட்சியால் அமுல்படுத்தப்படும் ஐரோப்பிய சங்கம் தொடர்பான கோட்பாடுகளை மாசின் கற்றலன் ஒருங்கிணைப்பு மற்றும் ஒற்றுமைக் கட்சியானது எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டுள்ளது.

Catalonia




வைப்பதில் தலைமை தாங்க முடியாது.

தற்போது நடந்து முடிந்த மாகாணத் தேர்தல்களில் இரு தேசியக் கட்சிகளும் போட்டியிட்டன. அதாவது சமவுடமைக்கட்சி 20ஆசனங்களையும் ஸ்பயெின் பிரதமரின் மக்கள் கட்சியானது 10 ஆசனங்களையும் வென்றுள்ளன. இந்நிலையில் கருத்து வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டு கற்றலோனியா தனிநாடாக அங்கீகரிக்கப்படவேண்டும் எனக்கோரும் கட்சிகள் தமக்கிடையே

வேளை, கற்றலோனியாவின் மொத்த தேசியவருமானமானது 320 பில்லியன் டொலர்களாகும். கற்றலோனியா, ஸ்பெயினின் தேசிய அரசாங்கத்திற்கு வரியாகவும் வருமான வரியாகவும் 21 பில்லியன் டொலர்களை செலுத்துவதும் குறிப்பிடத்தக்கதே. பொருளாதாரத்தை மையமாகக் கொண்டே கற்றலேனியா ஸ்பெயினில்இருந்து பிரிந்து செல்லவேண்டும் என விவாதிக்கப்படுகின்றதே தவிர, இதற்கென

ஆகியன, ஜனநாயக வழியில் தமது பிரச்சினைகளை ஆராய்கின்றன. அரசியல் கட்டமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு இவை கையாளப்படுகின்றன. அத்துடன் இங்கு தீவிரவாதம் என்பது நடைமுறையில் இல்லை. ஆனால், இலங்கையானது இதிலிருந்து வேறுபட்டது.

இலங்கையானது ஜனநாயக விதிமுறைகளை மீறி, சிங்கள -பௌத்த தேசம் என்பதை அடிப்படையாகக் கொண்டு ஆளப்படுகிறது. இங்கு தீவிரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நீண்ட பத்தாண்டுகள்ாக உள்நாட்டு யுத்தம் ஒன்றும் இடம்பெற்றது. அதிகாரம் என்பது ராஜபக்சாக்களின் கைகளில் குவிந்துள்ளது.

இலங்கையில் பிரதம நீதியரசர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் அவர்மீதான விசாரணையை சந்தர்ப்பமாகக் கொண்டு இலங்கையில் நிலவும் அதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இங்கு ஏற்கனவே குறிப்பிட்டது. போன்று கற்றலன் மற்றும் ஈழம் ஆகிய இரண்டும் பெற்றுக்கொண்டுள்ள அனுபவங்கள் ஒத்தவையாகும். ஆனால், அடிப்படையில் இவையிரண்டினதும் கருத்தாக்கங்கள் இனம், வரலாற்று அடையாளங்கள் என்பன வேறுபட்டவை.

இலங்கையில் தொடர்ந்தும் அதிகாரத்துவம் அதிகரித்துச் செல்லுமாயின் இங்கு வாழும் சிறுபான்மை இனங்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் சமூகத்தினர் மத்தியில் பிரிவினை வாதம் தொடர்ந்து கொண்டே இருக்கும் இது விரைவில் இந்தியாவிலும் குழப்பநிலையை உருவாக்கும்.

புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி நோக்கி பயணிக்க மக்கள் பங்களிப்பு அவசியமானது

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்களின் பங்களிப்பு அவசியமானது. அமைச்சர்கள், அரச அதிகாரிகளினால் முன் னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் வெற்றியளிக்கவும் மக்களின் பங்களிப்பு அவசியமானது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித்திட்ட நூல் வெளியீட்டு விழா கே.கே.வீதியில் அமைந்துள்ள செல்வமஹால் மண்டபத்தில் நேற்று முன்தினம் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுடைய தேவைகளை அவர்களிடம் நேரடியாக சென்று அறிந்து அவற்றை நூல் வடிவில் உருவாக்கி அதனை வெளியிட்டு வைக்கிறது யாழ்.மாநகரசபை. இவ்வாறான செயற்பாடுகள் வரவேற்கக்கூடியது .

தேவைகளை அடையாளப்படுத்தியதிலிருந்து அத்தேவைகள் நிறைவேற்றப்படும் வரை மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. ஜனாதிபதி மகிந்தவின் சிந்தனையிலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்திகளில் மக்களின் பங்களிப்பு அவசியமானது.அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் மக்களை நோக்கிய அபிவிருத்தி திட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

நாட்டின் முழுப்பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அமைச்சர்களினாலும் அரசாங்க அதிகாரிகளினாலும் ஒரு பிரதேசத்தின் சகல மக்களுடைய தேவைகளையும் இனங்கண்டு நிவர்த்தி செய்து விட முடியாது. அப்பிரதேச மக்களின் பங்களிப்பு அவசியமானது. போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு யாழ். குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதிக நிதி ஒதுக்கீடு கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது.

2013 ஆம் ஆண்டும் யாழ். மாவட்டத்திற்கே அதிக அளவான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

எனவே மக்களின் பங்களிப்பு அபிவிருத்தித்திட்டங்களுக்கு கொழும்பு போன்று அனைத்து வசதிகளையும் கொண்டநகரமாக யாழ்.மாவட்டத்தையும் மாற்றமுடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ-6)

## யாழ்.ஜெய்ப்பூரில் இன்று மாற்றுவலுவுடையோர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் இன்று செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் யாழ்.ஜெய் ப் பூர் நிறுவன தலைவர் வைத்தியர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் க.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலுவிழந்தோருக்கான நடமாட உதவும் உபகரணங்களும் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் வழங்கப்படவுள்ளது. (அ)

## பாதசாரிகடவை அமைக்கப்படவில்லை

(குருமன்காடு)

குருமன்காட்டு சந்திக்கும் புகையிரத கடவைக்கும் இடையில் உள்ள வீதியில் பாதசாரி கடவை இல்லாத காரணத்தினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இப்பகுதியில் வங்கி, தனியார் கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகளவு காணப்படுகின்றது.அது மட்டுமல்லாது மன்னார் வீதியூடாக வாகனங்கள் அதிகளவு செல்வதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ்விபத்துக்களை தடுக்க வேண்டுமெனில் பாதசாரி கடவை அமைப்பதுடன் வாகனங்களின் வேக கட்டுப்பாட்டை நடை முறைப் படுத்த வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9)

## முருங்கனில் சுகாதார வாரம்



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்வுகள் மன்னார் முருங்கன் வைத்தியசாலை மற்றும் அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் சிரமதானம், வீட்டுத்தோட்டம், சுகாதார விழிப்புணர்வுகள் தொற்று நோய்களை பரிசோதித்தல் போன்ற பல்வேறு செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்தார். (அ-2)

## கதிர்காமம் -பாணமை வீதிக்கு வேகத்தடை ஏற்படுத்த முடிவு

(கொழும்பு)

யால வனவிலங்கு சரணாலயத்தின் ஊடாக அம்பாறை மாவட்டத்தின் பாணமையில் இருந்து கதிர்காமம் வரை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய நெடுஞ்சாலை இந்த சரணாலயத்தின் விலங்குகளுக்கு பேராபத்தை ஏற்படுத்துவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த நெடுஞ்சாலை யால சரணாலயத்தின் நடுவில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதனால் அந்த நெடுஞ்சாலை இருமருங்கிலும் உள்ள வனவிலங்குகள் கடந்து செல்லும் போது அவை அதிவேகமாக செல்லும் வாகனங்களினால் மோதுண்டு கொல்லப்படுகின்றது.

இதுபற்றி வனவிலங்கு மற்றும் கமநல சேவை பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன கருத்துத் தெரிவிக்கையில், யால வனவிலங்கு சரணாலயம் அங்குள்ள விலங்குகளுக்கு வாகனங்களினால் தீங்கிழைக்கப் படுவதை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதென்றுதான் தீர்மானித்திருப்பதாக கூறினார்.

இந்த சரணாலயத்துக்குள் செல்லும் வாகனங்கள் வேகத்தைக் குறைத்துச் சென்றால் பாதையைக் கடக்கும் மிருகங்களுக்கு ஆபத்து ஏற்படாது வாகனத்தின் வேகத்தைக் குறைப்பதற்காக வேகத்தடைகளை இடையிடையே நிர்மாணிப்பதென்றும் இந்தப் பாதையில் வேகத்தைக் குறைத்து வாகனத்தை செலுத்தவேண்டும் என்றும் பல இடங்களில் எச்சரிக்கைப் பலகைகளை வைப்பதற்கும் தமது அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது என தெரிவித்தார்.

இந்த நெடுஞ்சாலையில் அதிவேகமாக பயணிக்கும் வாகனங்களினால் மோதுண்டு ஒரு யானை, ஒரு கரடி, ஒரு சிறுத்தை உட்பட பல குரங்குகளும் எருமைகளும் காட்டுப் பன்றிகளும் கொல்லப்பட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதையில் வாகனங்கள் அதி வேகமாக செல்வதனால் அது யால சரணாலயத்தில் உள்ள விலங்குகளுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இந்த அதிர்ச்சி வனவிலங்குகளின் நீண்ட ஆயுளுக்கு தீங்கிழைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## அதிகாரி கொலை தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு ஒரு மில்லியன்

நில அளவைத் திணைக்கள அதிகாரி கொலை தொடர்பான தகவல்களை வழங்குவோருக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானம் வழங்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரியான நாமல் அஜந்த அண்மையில் மன்னாரில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் துல்லியமான தகவல்களை வழங்குவோருக்கு ஒரு மில்லியன் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சன்மானம் வழங்குவது தொடர்பிலான விளம்பர சுவரொட்டிகள் மன்னார் மாவட்டத்தில் ஒட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை திருவாசக முற்றோதல் நடை பெறவுள்ளதாக சத்யசாயி சேவா நிலை யத்தலைவர் அறிவித்துள்ளார். (அ-9)

## பஹ்ரெய்னில் இலங்கை தூதரகம் அமைப்பு

பஹ்ரெய்னில் இலங்கை தூதரகம் ஒன்றை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.எதிர்வரும் மாதத்தில் முழு அளவில் இயங்கக்கூடிய ஓர் தூதரகமொன்றை பஹ்ரெய்னில் திறக்கவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. பஹ்ரெய்னில் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.தூதரகம் ஒன்றை அமைப்பதன் மூலம் இவர்கள் கூடுதல் நன்மை அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

குவைத்திற்கான இலங்கைத்தூதுவரான முதியன் சலாகே விஜேரட்ன பஹ்ரெய்னுக்கான தூதுவர் பதவியையும் தற்போதைக்கு வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஒளி விழா நிகழ்வு அண்மையில் ரதிலக்ஸ்மி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட புனிதவளனார் குருமட அதிபர் அருட்தந்தை செபமாலை அன்புராசா உரையாற்றுவதையும் ஆசிரிய மாணவர்களின் கலைநிகழ்வினையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

314

## நிமிர்ந்து நடந்தான்!



மாயாபுரி மன்னன் மகேந்திரபூபதி தன் ஒரே மகன் ரவீந்திரபூபதியும் தன்னைப்போல வீரமும் தீரமும் மிக்கவனாய் இருந்து மன்னனாக வேண்டும் என்று விரும்பினான். அதனால் ரவீந்திரன் போர்க்கலையையும் ஆட்சி அரசியல் ஆகியவற்றையும் நன்கு பயில ஏற்பாடு செய்தான். ரவீந்திரன் அவற்றையெல்லாம் கற்றபின் அரண்மனையில் தன் அறைக்குள்ளேயே இருந்து ஏதோ யோசித்தவாறும் அவ்வப்போது ஓவியங்கள் வரைந்தும் பொழுதைப்போக்கிவந்தான். எப்போதாவது அவன் தனியாகக் காட்டுப்பகுதிக்குச் சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்து விட்டு வரலானான்.

தன் மகனின் இந்தப்போக்கைக் கண்ட மகேந்திரபூபதி ஒருநாள் அவனிடம் மகனே நீ இப்படி எதிலும் பட்டும்படாமல் இருப்பது சரியல்ல. இந்த வயதில் சுறுசுறுப்பாக நீ இருந்து ஆட்சி முறையைக் கவனிக்கவேண்டும். எதிலும் பற்றில்லாமல் தனியாக உட்கார்ந்து எப்போதும் ஏதோ யோசிப்பது சரியல்ல என்றான்.


அதற்கு ரவீந்திரன் தந்தையே எனக்கு அரண்மனை ஆடம்பர வாழ்வு பிடிக்கவில்லை. ஏதோ ஒரு புதுமையைக்காண என் மனம் துடிக்கிறது. சிறிது நாட்கள் நான் அரண்மனையில் வசிக்காது நம் நாட்டின் பல பகுதிகளைக் கண்டுவர விரும்புகிறேன். அதற்கு அனுமதி கொடுங்கள் என்று வேண்டினான்.

அதைக்கேட்ட மகேந்திரபூபதி

### அம்புலிமாமா கதைகள்

சற்று யோசித்துவிட்டு மகனே நீ இந்த நாட்டின் மன்னனாகப் போகிறவன். நீ ஒரு அரசகுமாரியை மணந்து கொள். அப்போதுதான் உனக்கு அதில் பிடிப்பு ஏற்படும். உற்சாகமடைவாய். நான் உனக்கு சில அரசகுமாரிகளின் உருவப்படங்களை நான் காட்டுகிறேன். அவர்களில் யாராவது ஒருத்தியைத் தேர்ந்தெடு. அவளை உனக்கு மணம்முடித்து வைக்கிறேன் என்றான். ரவீந்திரன் பதில் ஏதும் கூறவில்லை. ஆனால் மகேந்திரபூபதியோ சில அரசகுமாரிகளின் உருவப் படங்களை வரவழைத்துக் காட்டினான். அவற்றைப்பார்த்த ரவீந்திரன் எதையும் தேர்ந்தெடுக்கவில்லை. ஆனால் மகேந்திரபூபதியோ அழகாபுரி மன்னனின் மகள் அர்ச்சனாவை தன் மகனுக்கு விவாகம் செய்து வைத்து விடுவது என்று தீர்மானித்து விரைவிலேயே அவளை ரவீந்திரனுக்கு திருமணம் முடித்துவைத்தும் விட்டான்.

ஆனால் திருமணம் நடந்ததுமே ரவீந்திரன் யார் கண்ணிலும் படாமல் எங்கோ போய் விட்டான். கணவன் முகத்தைக்கூட அர்ச்சனா நேருக்கு நேர் நின்று பார்த்ததுமில்லை. அவனது



உருவப்படத்தைத்தான் பார்த்திருந்தாள். எனவே அன்றிரவு முதல் தடவையாக கணவரை நேருக்கு நேர் பார்க்கலாம் என்று அவள் எண்ணியது நடக்கவில்லை.

திருமணம் நடந்ததும் ரவீந்திரன் தன் குதிரைமீது அமர்ந்து வேகமாக அதனை ஓட்டி இரண்டு நாட்கள் எங்கும் நிற்காமலே சென்றான். பசி, தாகம் அவனை வாட்டவே களைத்துப்போய் அவன் குடிக்கத்தண்ணீராவது கிடைக்குமா என்று ஓரிடத்தில் நின்று சுற்றிலும் பார்த்தான். சற்றுத் தொலைவில் ஒரு சிற்றோடையைக் கண்டு அங்கு செல்வதற்காகத் தன் குதிரையிலிருந்து கீழே இறங்கினான்.

அவன் ஒரு அடி எடுத்துவைத்ததுமே சட்டென நின்றான். அதற்குக் காரணம் அந்த ஓடையில் அழகிய பெண்ணொருத்தி குளித்துக் கொண்டிருந்தாள். அவளைக்கண்டு ரவீந்திரன் மெய்மறந்துபோய் நின்றான். சற்று நேரமான பின் அந்த இளநங்கை ஓடையில் இருந்து கரையேறி வந்தாள். அவள் ரவீந்திரனைக் கண்டதும் பயந்து விட்டாள். அப்போது ரவீந்திரன் அவள் பயப்படவேண்டாம் என்று சைகையால் உணர்த்தினான். பின்பு அவன் மெல்லிய குரலில் பெண்ணே பயப் படாதே! நான் தண்ணீர் குடிக்கவே இந்த ஓடைக்கு வந்தேன். ஆமாம், நீ யார் அதை நான் தெரிந்து கொள்ளலாமா? என்று கேட்டான்.

அதைக்கேட்டு அவள் பயம் நீங்கியவளாய் என் பெயர் சந்திரிக்கா. நான் ஒரு சிற்றரசனின் மகள். நீங்கள் இப்போதே இங்கிருந்து போய்விடுவதே உங்களுக்கு நல்லது என்றாள். அது கேட்டு அவன் மனம் துள்ளியது. அவன் நான் போகமாட்டேன். இங்குள்ள இயற்கைக்காட்சிகளை கண்டு களிக்கப்போகிறேன். ஒரு சில நாட்கள் இங்குள்ள ஏதாவதொரு மலைக் குகையில் இருக்கப்போகிறேன் என்றான்.

அதைக்கேட்ட சந்திரிக்கா எம் கூட்டத்தவர் உங்களைப் பார்த்து விட்டால் பிடித்து இலகுவில் விடமாட்டார்களே. எனவே ரவீந்திரனும் அவர்களால் என்ன செய்துவிடமுடியும் என்பதைப் பார்க்கிறேனே. அதனால் இங்கேயேதான் இருப்பேன் என்று உறுதியாகக் கூறினான். அதைக்கேட்ட சந்திரிக்கா, சரி நீங்கள் இருக்க ஒரு குகையைக் காட்டுகிறேன். தினமும் உங்களுக்கு உணவும் கொண்டு வந்து கொடுக்கிறேன் என்றுகூறிவிட்டு சட்டென்று அங்கிருந்து சென்றுவிட்டாள்.

சந்திரிக்கா ரவீந்திரனுக்கு தினமும் உணவு கொண்டுவந்து கொடுத்ததோடு பல பழங்களையும் கொடுத்தாள். ஒரு நாள் அவள் வண்ணங்களையும் ஒரு தூரிகையையும் கொண்டுவந்து ரவீந்திரனிடம் இவற்றை யாரோ இந்தக் காட்டில் விட்டுவிட்டுப்போய் இருக்கிறார்கள்.

இவை உங்களுக்குப் பயன்படுமா? என்று கூறி அவற்றைக் கொடுத்தாள். அவற்றைக்கண்ட ரவீந்திரன் மகிழ்ந்து சந்திரிக்காவைப் பல கோணங்களில் ஓவியங்களாக வரைந்தான்.

இப்படியே பத்து நாட்கள் கழிந்தன. ஒருநாள் சந்திரிக்கா மிகவும் கவலைப்பட்டவாறே ரவீந்திரனிடம் நீங்கள் வேறு எங்காவது இப்போதே போய்விடுங்கள். எங்கள் இனத்தவருக்கு உங்களைப் பற்றி எப்படியோ தெரிந்துவிட்டது. எவ்வித ஆயுதமும் உங்களிடம் இல்லையே. அவர்களோடு உங்களால் எப்படி எதிர்த்துப் போரிடமுடியும் என்று கேட்டாள்.


அப்போது ரவீந்திரன் சந்திரிக்கா எதிலும் பற்றில்லாத என்னை உற்சாகப்படுத்தி வாழ்வு என்பது என்ன என்பதை எனக்கு நீ உணர்த்தி விட்டாய். இப்போது நான் வாழ எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

முன்பு இருந்த விரக்திபோய் விட்டது. உன்னை விட்டு நான் பிரிந்து போகவேமாட்டேன். என் பெற்றோரின் அனுமதிபெற்று உன்னை மணந்துகொள்கிறேன்.

அப்போது ஒரு மரத்தின் பின்னால் இருந்து மகேந்திரபூபதி அவர்கள் அருகே வந்து எங்கள் அனுமதி கிடைத்துவிட்டது. ரவீந்திரா இந்த சந்திரிகா வேறு யாருமில்லை.

நீ மணந்து கொண்ட அரசகுமாரி அர்ச்சனாதான் இவள். உன்னைத் தேடிக்கொண்டு வந்து உனக்கு ஒரு மனைவி செய்யவேண்டிய பணிகளை எல்லாம் செய்தாள். உன்னைத் தேடிக் கண்டுபிடித்த பின் உன் மனதை மாற்ற என்னசெய்யலாம் என்று யோசித்தேன். இது நான் அவளிடம் கூறியயோசனை. அது நன்கு நடந்துவிட்டது என்று கூறி மகிழ்ந்தான்.

இதன்பின் மூவரும் தலை நகருக்குச் சென்றனர்.



மகேந்திரபூபதி ரவீந்திரனை அரியாசனத்தில் அமர்த்தி ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வுபெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடி செய்யப்பட்ட 836 கோடி மதிப்புள்ள நிலம் மீட்கப்பட்டுள்ளன

## தனது ஆட்சியில் என்கிறார் 'ஜெ'

தமிழகத்தில் ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் தான் எடுத்து வரும் நடவடிக்கையால் சட்டம் ஒழுங்கு முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் நில மோசடி வழக்கு, கிரனைட் முறைகேடு, அரிசி கடத்தல், தடுப்பு உள்ளிட்டவிடயங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது நிம்மதி அடைந்துள்ளனர் என்றும் இது போன்ற கடும் நடவடிக்கைகள் எடுக்க கலெக்டர்கள், பொலிஸ் அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டார்.

ஜெயலலிதா தலைமையில் கலெக்டர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மாநாடு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10 ஆவது தளத்தில் உள்ள கூட்டரங்கில் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது.

அங்கு உரையாற்றிய முதல்வர், தமிழகத்தில் ஏழை மக்களை கருத்திற்கொண்டு ஆட்சி நடத்தப்படுகிறது. வெளிப்படையான, நேர்மையான நிர்வாகத்தை வழங்கி வருகிறோம். ஏழை மக்களுக்கு உதவி செய்யும் வகையில் பல்வேறு நல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியை அரசு கருத்திற்கொண்டுள்ளது. விலையில்லா அரிசி வழங்குவதற்கு 3 ஆயிரத்து 300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 16 ஆயிரத்து 272 நில மோசடி வழக்கு பதியப்பட்டு உரிய முறையில் விசாரணை நடத்தப்பட்டு 836 கோடி மதிப்புள்ள நிலம் மீட்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிரனைட் முறைகேடு தொடர்பாக முழுஅளவில் விசாரணை நடத்தப்பட்டு 9 ஆயிரத்து 783 கோடி ரூபாய் மீட்கப்பட்டுள்ளது. அரிசி கடத்தல், சாதி மோதல் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது என்றார். (அ)

# பிஜி தீவை தாக்கியது சூறாவளி; சுற்றியுள்ள தீவுகள் மூழ்கும் அபாயம்

## இதுவரை 4 பேர் பலி

பசுபிக் கடலில் உருவாகியுள்ள சூறாவளி பிஜி தீவை மிக கடுமையாக தாக்கியுள்ளது.

பசுபிக் கடலில் மையம் கொண்டுள்ள புயலால் பிஜி தீவில் 300 கிலோமீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசுகிறது. இதனால் அந்நாட்டின் விமான சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

புயல் வீச தொடங்கியதும் ஏராளமான மரங்கள் சாய்ந்து வீழ்ந்தமையால் பெரும்பாலான பகுதிகளில் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இப்பயுலுக்கு இதுவரையிலும் 4 பேர் பலியாகியுள்ளதுடன் 8 பேரை காணவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

புயலை தொடர்ந்து பலத்த மழை பெய்வதால் மலை பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் மக்கள் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிஜி தீவை சுற்றியுள்ள குட்டி தீவுகள் இந்த புயலால் மூழ்கும் அபாயம் உள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த பயங்கர புயலை சமாளிக்க தேவையான உதவிகளை வழங்கும் படி பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து நாடுகளின் உதவியை பிஜி தீவின் இராணுவ தலைவர் வொரிக் பைனிமராமா கோரியுள்ளார்.

# சவுதி இளவரசர் வாங்கிய விமானம் அரண்மனையாகிறது



சவுதி அரேபிய இளவரசர் அதிநவீன ஏ 380 சுப்பர் ஜம்போ விமானத்தை விலைக்கு வாங்கி அதனை 485 மில்லியன் டொலர் செலவில் பறக்கும் அரண்மனை மாதிரி அமைத்து வருகிறார்.

எண்ணெய் வளம் மிக்க சவுதி அரேபியாவின் இளவரசர் அல்வாலீத் பின் தலால் மிகப்பெரிய கோடீஸ்வரர்.

இவர் அதிநவீன ஏ 380 சுப்பர் ஜம்போ விமானத்தை விலைக்கு வாங்கியுள்ளார். அதை அரண்மனை போன்று சகல வசதிகளுடன் மிகப் பிரமாண்டமாக மாற்றியமைத்து வருகிறார். 2770 கோடி ரூபா செலவில் உருவாகும் இந்த விமானத்தை பறக்கும் அரண்மனை என்று அழைக்கின்றனர்.

இந்த விமானம் கடந்த 2009 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கப்பட்டு அரண்மனை போன்று மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. அதற்கான பணிகள் முடிந்து 2013 ஆம் ஆண்டு டெலிவரி எடுக்கப்படுகிறது.

பறக்கும் அரண்மனை வடிவிலான இந்த விமானத்தில் 4 படுக்கைகள், மிகப் பெரிய அளவிலான படுக்கைகள் கொண்ட 5 அதி நவீன அறைகள், பிரார்த்தனை அறை, கணனி வசதிகளுடன் கூடிய ஒன்றுகூடல் மண்டபம், ரோல்ஸ் ராயல்ஸ் கார் நிறுத்தும் சொகுசு அறை உள்ளிட்டவை உள்ளன. (அ-2)

# விமான படைத்தளத்தை தாக்கிய தலிபான்கள் சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள விமானப் படைத்தளத்தில் தாக்குதல் நடத்த முயன்ற தலிபான் தீவிரவாதிகள் 9 பேரை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரத்தில் பாச்சா கான் சர்வதேச விமான நிலையம் உள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு விமான நிலையத்தை குறிவைத்து தலிபான்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில் ஏவுகணை குண்டுகள் விமான நிலைய ஓடுபாதை அருகே வெடித்ததில் ஐந்து பேர் பலியாகினர். 50 பேர் வரை காயமடைந்தனர். இந்த தாக்குதலால் விமான நிலையம் மூடப்பட்டது.

உடனடியாக பாகிஸ்தான் அதிரடி படை வீரர்கள் ஏவுகணை குண்டுகளை வீசிய பயங்கரவாதிகளை சுற்றிவளைத்து தாக்கினர். இதில் 9 தலிபான்கள் கொல்லப்பட்டனர். இம் மோதலில் தலிபான்கள் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியானதாக கூறப்படுகிறது.

# குஜராத் தேர்தலில் திடீர் வன்முறை; துப்பாக்கிச்சூட்டில் வேட்பாளர் காயம்

குஜராத்தில் நேற்று இறுதிக்கட்ட தேர்தல் நடந்தது. வாக்குப்பதிவு நடந்து கொண்டிருந்த பா.ஜ.வேட்பாளர் ஒருவர் மீது மர்ம கும்பல் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் வேட்பாளர் உட்பட 3 பேர் காய முற்றனர். இதனையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் 2 ஆவது இறுதிக்கட்ட தேர்தல் வாக்கு பதிவு பிற்பகல் வரை 35 முதல் 40 சதம் வரை பதிவானது. தேர்தலில் பஞ்சமகால் தொகுதியில் வாக்கு சாவடியை பார்வையிட வந்த பா.ஜ.க வேட்பாளர் ஜெப்தா பர்வத் மீது துப்பாக்கியால் சுட்ட பின் மர்மநபர்கள் ஓடிவிட்டனர். இதில் 3 பேர் காயமுற்றனர். காயமுற்ற நபர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இது தொடர்பாக கட்சி நிர்வாகிகள் முதல்வர் மோடிக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இந்த பகுதியில் தற்போது கூடுதல் பாதுகாப்பு முடுக்கி விடப்பட்டுள்ளது. இந்நிலையில் தனது தொகுதியில் வாக்களித்த மோடி நிருபர்களிடம் பேசுகையில், மாநில அரசின் வளர்ச்சி பணிகளுக்கு மக்கள் மீண்டும் அங்கீகாரம் கொடுத்து வெற்றியை தருவார்கள் என்றார். பிரதம வேட்பாளர் குறித்து கேள்வி கேட்ட போது 6 கோடி குஜராத் மக்களுக்காகவே நான் வாழ்கிறேன். இவர்களுக்கு சேவை செய்வது இந்தியா வுக்கு சேவை செய்வதாகத்தான் நினைக்கின்றேன் என்றார்..

# துப்பாக்கி சூட்டில் பலியாகுமுன் தாய்க்கு மகன் எழுதிய கடிதம்

அமெரிக்காவில் ஆரம்ப பாடசாலையில் நடந்த துப்பாக்கி சூட்டில் பலியாகும் முன்பு 6 வயது சிறுவன் தனது தாய்க்கு கடிதம் எழுதி வைத்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கனெக்டிகட் நகரில் உள்ள சாண்டிஹூக் பாடசாலையில் ஆடம் லான்சா என்பவர் கண் மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தியதில் 20 குழந்தைகள் பலியாகினர்.

இந்த துப்பாக்கி சூட்டில் பலியான 6 வயது சிறுவன் பிரையன் சாகும் முன்பு தனது தாய்க்கு கடிதமொன்றை எழுதி வைத்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் ஐ லவ் யூ அம்மா. நான் சந்தோசமாகவும் நலமாகவும் உள்ளேன். நல்ல மகனாக இல்லாததற்காக மன்னிக்கவும். நான் சொர்க்கத்திலிருந்து உங்களை நேசிப்பேன் என்று கூறப்பட்டுள்ளது.




பாகிஸ்தானுக்கு எதிரான போரில் உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம்.

# வெளிவிவகார அமைச்சராக யோன்கெர்ரி தெரிவாவாரா?

(வோஷிங்டன்)

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் பதவிக்கு செனட்டர் யோன் கெர்ரியை ஜனாதிபதி ஒபாமா பரிந்துரைக்க போவாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஓய்வு பெறுவதையடுத்து அவரது பதவிக்கு செனட் வெளிவிவகார குழுவின் தலைவராகவும் மசாசுசெட்ஸ் செனட்டராகவும் இருக்கும் கெர்ரியை (வயது 69) ஜனாதிபதி ஒபாமா பரிந்துரைக்கவிருக்கிறார்.

தனக்கு பேருதவியாக உள்ள கெர்ரியை வெளிவிவகாரத்துறை அமைச்சராக அடுத்த வாரம் ஒபாமா பரிந்துரைப்பார் என்று தெரிகிறது.

ஒபாமாவின் பரிந்துரையை செனட் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி கெர்ரி வெளிவிவகாரத்துறை அமைச்சராவார்.

முன்னதாக இலினாய்ஸ் மாநில செனட்டராக இருந்த ஒபாமா 2004 ஆம் ஆண்டு தேர்தலில் முதன் முறையாக அமெரிக்க செனட்டர் பதவிக்கு போட்டியிட்டார். அப்போது நடந்த ஜனநாயக கட்சி தேர்தலில் ஜனாதிபதி பதவிக்கு யோன் கெர்ரி தெரிவு செய்யப்பட்டார்.

யோன் கெர்ரியை மிகுந்த மரியாதையுடன்பயன்படுத்திக் கொண்டார்.

2012 ஆம் ஆண்டு தேர்தலில் யோன் கெர்ரி ஒபாமாவுக்கு பெரும் உதவியாக இருந்து தேர்தல் சவால்களை முறியடிக்க உறுதுணையாக இருந்தார் என தெரிய வருகிறது.

# சியாச்செனில் பனிச்சரிவு 5 ஜவான்கள் உயிரிழப்பு

உலகின் மிக உயர்ந்த போர் பிரதேசமான சியாச்சென் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 6 ஜவான்கள் பலியாகியுள்ளனர். ஜம்மு காஷ்மீரில் மிக உயர்ந்த பனிப்பிரதேசமான சியாச்சென் பகுதியில் நேற்றையதினம் திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் ஐந்து ஜவான்கள் பலியானதாகவும் ஒருவர் காணாமல் போனதாகவும் இராணுவ வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து சியாச்சென் பகுதிக்கு மீட்பு படையினர் விரைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை போகப்பொருளாக பார்க்கும் நிலைமாற வேண்டும்

## தேவை நாடும் மகளிர் அமைப்பின் செயற்பாட்டு இணைப்பாளர் ஆரணி

(யாழ்ப்பாணம்)

போரின் காரணமாக யாழ். மாவட்டத்தில் பல பெண்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உதவிகளை செய்ய விருப்பம் உள்ளபோதும் பல தடைகள் உள்ளன என தேவை நாடும் மகளிர் அமைப்பின் செயற்பாட்டு இணைப்பாளர் ஆரணி பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட தேவை நாடும் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். ரில்ஹோ விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற பால்நிலை சமத்துவம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதும் அவர்கள் வன்முறைகளுக்குட்படுத்தப்படுவதும் உலகளாவிய ரீதியில் இடம்பெறும் சம்பவம்.

பால் நிலை சமத்துவம் உருவாக்கப்படும் போது தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட முடியும்.

பெண்கள் உரிமைகள் தொடர்பில் பாராளுமன்றங்களிலும் பேசப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் குடும்ப வன் முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளான பெண்களின் தரவுகள் முழுமையாக எடுக்க முடியவில்லை.

இதனால் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதும் கஷ்டமாகவுள்ளது. வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படும் பெண்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். தமது குழந்தைகளைக் கொலை செய்யும் நிலைக்கு கூட பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பல முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளது. இது யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் இடம்பெற்று வருகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடையாத நாடுகள் என்ற வேறுபாடுகள் இதற்கு இல்லை.

பெண்கள் தமக்கு ஏற்படுத்தப்படும் வன்முறைகளுக்கு எதிராக வெளிப்படையாக பேசுவதற்கு தயங்குகின்றனர். இதனால் மீண்டும் மீண்டும் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர்.

அலுவலக ரீதியிலும் அமைச்சுக்கள் ரீதியிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்று வருகின்றது. ஆனால் குடும்ப வன்முறைகளிலேயே அதிகளவான பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். பொலிஸ் நிலையத்திற்கு செல்வதற்கு கூட பெண்களுக்கு ஒரு துணை தேவைப்படுகிறது. அந்தளவுக்கு பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையில் உள்ளது. சுதந்திரமில்லை. சமஉரிமை இல்லை. பொருளாதார ரீதியில் பின்னடைவு. இவ்வாறு பல அடக்கு முறைகள் பெண்கள் மீது சுமத்தப்படுகின்றது.

பெண்கள் போகப் பொருட்களாக பார்க்கப்படும் நிலை மாற்றப்பட்டு வன்முறைகளிலிருந்து விடுபட வேண்டும் எனப் பல கருத்துக்களை முன்வைத்த அவர் தேவைநாடும் பெண்களுக்கு தமது அமைப்பின் ஊடாக சுய தொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்படும் பெண்களுக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட்டும் ஆலோசனைகள் வழங்கப்பட்டும் வருவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு வன்முறைகளுக்குள்ளாக்கப்படும் பெண்கள் அல்லது பாதிப்புக்குள்ளாக்கப்படும் பெண்கள் 0778899019 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டாலும் இங்குள்ள பெண்களுக்கு பல தேவைகள் உள்ளதை தான் உணர்ந்து கொண்டுள்ளதாகவும் உதவிகளைச் செய்ய விருப்பம் இருந்தும் நிதிப் பற்றாக்குறை மற்றும் அனுமதி மறுக்கப்படுவதால் உதவிகளைச் செய்வதில் தடையுள்ளதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். (அ-6)

# நாம் எல்லோரும் ஒருதாய் மக்களாக வாழ வேண்டும்

## யாழ். கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(மல்லாகம்)

மீண்டும் நாம் யுத்தத்தை பற்றிக்கதைக்க வேண்டிய அவசியமில்லை. யுத்தம் முடிவடைந்து விட்டது. ஆகவே நாங்கள் எல்லோரும் ஒருதாய் மக்களாக இங்கு வாழ வேண்டும் என எண்ணுகின்றோம். எனவே தாய் நாட்டின் அபிவிருத்திக்காக இளைஞர், யுவதிகள் முன்வரவேண்டும் என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் பேராசிரியர் என்.யோகராஜன் தலைமையில் நடைபெற்ற சிங்களக் கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் மற்றும் வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களின் சுதேச மருத்துவ மாணவமலர் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாட்டில் அபிவிருத்தியைக் கொண்டு வருவதற்கு முதலாவதாக இருக்க வேண்டியவர்கள் இளைஞர், யுவதிகளே. தொழில்நுட்பக் கல்வியூடாக இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படும் பயிற்சியூடாக இளைஞர், யுவதிகளை இந்நாட்டின் அபிவிருத்தி தேவைகளுக்கு பயன்படுத்த முடியும்.

இந்தச் சமாதான காலத்தில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இளைஞர், யுவதிகள் இந்நாட்டின் அபிவிருத்திக்கு என்ன செய்ய வேண்டும் என எண்ண வேண்டும். இராணுவத்தின் செயற்பாடுகள் கூடுதலாக முடிவடைந்து விட்டது. நாங்கள் பொலிஸார் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம்.

இந்த நாட்டின் அபிவிருத்திக்காக நாங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டின் பிரதிநிதி என்னும் வகையிலும் இராணுவத்தினர் என்னும் வகையிலும் நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம். இதற்கு தேவையான முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். நாட்டின் இளைஞர், யுவதிகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றேன் என்றார். (அ-9-21)

# கனடா- இலங்கை எம்.பிக்கள் நட்புறவுக் குழு ஆரம்பம்?

(கொழும்பு)

முன்னொரு காலத்தில் கனடாவின் இலங்கை தொடர்பான கொள்கைகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த கனடா- இலங்கை பாராளுமன்றக் குழு நட்புறவுக் குழு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுமே பரஸ்பரம் கருத்துக்களைப் பகிரும் விதமாகச் செயற்பட்டு வந்த இந்த குழுவின் செயற்பாடுகள் 2005 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் அதன் பக்கசார்பான நடவடிக்கைகளால் முடிவிற்கு வந்திருந்தன.


எனினும் தற்போது கிடைக்கப்பெறும் தகவல்களின் படி இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட கனேடியப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் பரிந்துரையின் பிரகாரம் அந்த அமைப்பு மீண்டும் உயிர் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

கனடாவின் சகல கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிக்கும் இக்குழுவின் தலைமைப் பொறுப்பை ஈழத்தமிழர் விவகாரத்தில் அக்கறையுள்ள ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நட்புறவுக் குழுவின் உயிர்ப்பிற்கு சகல கட்சிகளுமே ஆதரவளித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (அ-2)

# சிறுவர், பெற்றோர் விழிப்புணர்வு நிகழ்வு

கரைச்சி பிரதேச முன்பள்ளி சிறார்கள், பெற்றோர் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணி தொடக்கம் 4 மணிவரை கரைச்சி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கிளி.மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் இன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவிருந்த சர்வதேச முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தினவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-9)



யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேராவிற்கு யாழ். பொலிஸாரினால் நேற்றைய தினம் வருடாந்த அணிவகுப்பு மரியாதையொன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியை ஏமாற்றலாம். ஆனால் மனச்சாட்சியை ஏமாற்ற முடியாது.

–ஸ்டாஸ்லாஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நாங்கள் பறிகொடுத்தவர்கள்; எங்களால் துயரை உணரமுடியும்

அமெரிக்க நாட்டின் மரியாதைக்குரிய அதிபர் பராக் ஒபாமா அவர்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் ஈழத் தமிழர்கள் எழுதும் கண்ணீர்க் கடிதம் இது.

அமெரிக்க தேசத்தில், ஒரு பாதகனின் துப்பாக்கிச் சூட்டில் 20 மாணவர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்த செய்தி கேட்டு இதயம் வலித்துப் போனோம்.

பள்ளிகளில் ஆனந்தமாக இருந்த குழந்தைகள் ஒருகணப்பொழுதில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தி பொய்யாக இருக்கக்கூடாதோ என்ற ஏக்கம் இன்னமும் தீரவில்லை.

சுட்டுக் கொல்லப்பட்ட குழந்தைகளைப் பார்த்து நீங்கள் கண்ணீர்விட்ட செய்தி அறிந்தபோது எங்கள் கண்கள் ஆறாய் பெருகின.

ஆம்! ஒரு நாட்டின் தலைவன் பண்புடையவராக, அன்புடையவராக இருந்தால் அதற்கான அடையாளங்களில் ஒன்று கண்ணீர் தான்.

அந்த இரக்கம் உங்களிடம் இருப்பதைக் கண்டு நெகிழ்ந்துபோனோம்.

அதேநேரம் நாங்களும் பறிகொடுத்தவர்கள்.

வன்னிப் போரில் துடிதுடித்துப் பலியாகிப் போன எங்கள் குழந்தைகளின் இழப்பு எங்கள் இதயங்களை இன்னமும் துளையிட்டுக் கொண்டே இருக்கின்றன.

அந்த வலியை உணருகின்ற எங்களால் உங்கள் வலியை–நீங்கள்விட்ட கண்ணீரின் பெறுமதியை உணரமுடியும்.

அமெரிக்க தேசத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட குழந்தைகளுக்காக, அந்த நாட்டின் தலைவராகிய நீங்கள் கண்ணீர் விட்டீர்கள்.

ஆனால் எங்கள் நாட்டில் எங்களுக்காக கண்ணீர் விடுவதற்கு தலைவர்கள் முன்னமும் இல்லை; பின்னமும் இல்லை.

அன்புக்குரிய அமெரிக்க தேசத்தின் தலைவர் ஒபாமா அவர்களே!

ஒரு பாதகன் பள்ளிக்குள் புகுந்து அங்கிருந்த 18 குழந்தைகள் உட்பட 27 பேரை சுட்டுக் கொன்றான் என்ற கொடும் துயரத்தில், குழந்தைகளின் உயிருக்கு அந்தந்த நாட்டு அரசுகள் பொறுப்புக்கூற வேண்டும் என்ற நியமத்தை உலகெங்கும் பரப்பவேண்டிய பொறுப்பை தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இனத்தால், மதத்தால், மொழியால் குழந்தைகள் கொல்லப்படுவார்களாக இருந்தால், அதுவே உலகின் மிகக் பெரும் பாதகச் செயலாக இருக்கும்.

ஆனால், எங்கள் இலங்கை நாட்டில் குழந்தைகள்–சிறுவர்கள் கொல்லப்பட்ட துயரம் வன்னியிலும் நடந்தது. ஹெப்பிற்றிகொலாவையிலும் நடந்தது.

எங்கு நடந்தாலும்; யார் செய்தாலும் அது மன்னிக்க முடியாத குற்றம்.

நீங்கள் விட்ட கண்ணீர் பெறுமதியானதாக இருக்க வேண்டுமானதாக இருந்தால், அமெரிக்காவில் குழந்தைகளை சுட்ட பாதகனுக்கான தண்டனையோடு நின்று விடாமல்,குழந்தைகள் எங்கெங்கெல்லாம் கொல்லப்பட்டார்களோ! அங்கெல்லாம் தண்டனைக் கணைகள் ஏவப்பட வேண்டும்.

இதைச் செய்யும் அதிகாரமும் தார்மீகப் பொறுப்பும் அமெரிக்காவிடமே உண்டு.

# மாணவர்களின் விடுதலை குறித்து யாழ். கட்டளைத் தளபதியுடன் பல்கலை நிர்வாகம் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு எனக் கூறி தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேரினதும் விடுதலை தொடர்பில் படைத் தரப்பினருடனான மீண்டுமொரு சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க உட்பட படைத்தரப்பின் உயர்மட்ட அதிகாரிகள், தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரினதும் பெற்றோர்கள், பீடாதிபதிகள் ஆகியோர் இடம்பெற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பு பல்கலைக்கழக மாணவர்களின் கைது தொடர்பில் பெற்றோருக்கு விளக்கமளிக்கும் சந்திப்பாகவே இருக்க முடியும் எனத் தெரியவருகின்றது.

யாழ்.பல்கலையில் கடந்த மாதம், 27, 28-ம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்களினையடுத்து பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேர் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் அதில் 10 மாணவர்கள் பல போராட்டங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டு இருந்தனர்.

விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஏனைய மாணவர்களான யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், ஒன்றியத்தின் செயலாளர் ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேனன், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் அங்கத்தவரான எஸ். சொலமன் ஆகிய நால்வரும் புனர்வாழ்வு எனக்கூறி வெலிகந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்நான்கு மாணவர்களினையும் உடனடியாக விடுவிக்கக்கோரி அரசியல் கட்சிகள், ஆசிரியர் சங்கங்கள் போராடி வரும் நிலையில் பல்கலைக்கழக நிர்வாகமும் இராணுவத்தினருடனான சந்திப்புகளையும், இறுதியில் கடந்த வெள்ளியன்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினை அவரது செயலகத்திலும் சந்தித்திருந்தனர்.

இச்சந்திப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு மறுப்புத் தெரிவித்த பாதுகாப்பு செயலர், குறுகிய காலத்திற்குள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே அவர்கள் விடுவிக்கப்படுவர் என கூறியிருந்தார்.

இச்சந்திப்பில் தான் இம் மாணவர்களின் பெற்றோர்களுடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு அவர்களுக்கு மாணவர்களின் கைது தொடர்பில் விளக்கமளிக்கப் போவதாகவும் கோரியிருந்தார்.

இச்சந்திப்பின் பிற்பாடு படைத்தரப்பினருடனான மீண்டும் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் கோத்தபாய ராஜபக்ஷ கோரியதற்கு இணங்க இச்சந்திப்பில் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனினும் இதன்போது பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொள்வாரா? என்பது உறுதிப்படுத்தப்பட விட்டாலும் யாழ்.இராணுவ கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க இதில் கலந்து கொள்ளவுள்ளார்.

இச்சந்திப்பானது எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று காலை 10.00 மணியளவில் பலாலி படைத் தலைமையகத்தில் இடம்பெறும் என உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு இரு வாரங்களாகியுள்ள நிலையில் பல்கலைக்கழக செயற்பாடுகள் செயலிழந்து 20 நாட்களுக்கு மேலாகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-4)

# கடத்தப்படவில்லை கைதானார் சுன்னாகம் பொலிஸார் அறிவிப்பு

இணுவில் பகுதியில் ஓட்டோவில் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவர் கடத்தப்பட்ட முறைப்பாடு கிடைத்தபோதுகுறித்த இளைஞன்கடத்தப்படவில்லை. சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் குறித்த இளைஞன் இணுவில் சந்திப் பகுதியில் ஓட்டோவில் சென்று கொண்டிருந்தபோது கடத்தப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பின்னர் இவரது கடத்தல் தொடர்பாக விசாரணை மேற்கொண்டபோது குறித்த இளைஞன் கடத்தப்படவில்லை.

குற்றச் செயல் ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று 3 முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்களில் மூவர் தொடர்பான முறைப்பாடுகள் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களாக யாழ்.மாவட்டத்திலிருந்தும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 37 பேர் தொடர்பில் இன்று வரை (நேற்று) முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 34 பேர் தொடர்பிலும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேர் தொடர்பிலும் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் நேற்று கிடைத்த மூன்று முறைப்பாடுகளில் இரண்டு பேர் கடந்த 15-ம் திகதியும், ஒருவர் 14-ம் திகதியும் கைது செய்யப்பட்டனர்.

இதில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரும் நெல்லியடியைச் சேர்ந்த ஒருவரும் தெல்லிப்பளையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# மாத்தறையில் மீன் மழை!

மாத்தறை மாவட்டத்தின் கம்புறுப்பிட்டிய பகுதியில் மீன் மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்[illegible]மாக நாட்டின் பல பாகங்களிலும் ஆங்காங்கே சிவப்பு மழை பெய்துவருகின்றது.

அத்துடன் வானத்தில் இருந்து பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால் மக்கள் மத்தியில் ஒருவித அச்ச நிலை தோன்றியுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் [illegible]ள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு [illegible]னில் இருந்து அதிசயங்கள் அடிக்கடி நிகழ்வதால் 21ஆம் திகதி மாயன் நாட்காட்டியை மேற்கோள் காட்டி சொல்லப்படும் உலக அழிவு நிகழ்ந்துவிடுமோ என மக்கள் மேலும் அச்சமடைந்துள்ளதாக [illegible] பிரதேசவாசிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அன்புதான் வாழ்க்கை




நாம் மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும்தான்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தெரியவில்லை. வளர்ச்சியடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மச்சரியமும் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன.

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத்திணித்து வைப்பதல்ல. அப்படித்திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணமாகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

அனைத்து தேவைகளையும் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.




# இறுதிப் போட்டிக்கு தெரிவானது யாழ்ப்பாணம் ஒக்ஸ்போர்ட் அணி

(கரவெட்டி)

வடமராட்சி வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டு கழகத்தின் கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாணம் ஒக்ஸ்போர்ட், மாலுசந்தி மைக்கல் அணிகள் தெரிவாகியுள்ளன.

வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியான அணிக்கு 5 ஓவர் 6பேர் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் 28 கழகங்கள் பங்குபற்றிய மேற்படி கிரிக்கெட் போட்டியில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் நியூபவர் அணியை 22 ஓட்டங்களால் வெற்றிபெற்று மாலுசந்தி மைக்கல் அணி தெரிவாகியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் முரளி 19, ரகுபரன் 10, தர்சன், அச்சுதன் தலா 9 ஓட்டங்களைப் பெற்றனர்.

அல்வாய் நியூபவர் அணியின் பந்துவீச்சின் சார்பில் ராம் 2, கிரி, மஞ்சு தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அல்வாய் நியூபவர் அணி 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிரி 13, மஞ்சு 11, பிரகாஸ் 6 ஓட்டங்களைப் பெற்றனர்.

மைக்கல் அணியின் பந்துவீச்சின் சார்பில் தர்சன், டினோஜன், கொலின்டன், முரளி, அச்சுதன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஒக்ஸ்போர்ட் அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி அணி மோதியது. இதில் இரண்டு விக்கெட்டினால் அளவெட்டி மத்தி அணியை வெற்றி பெற்று ஒக்ஸ்போர்ட் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி அணி 5 ஓவர் நிறைவில் இரண்டு விக்கெட்டை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் புனிதன் 20 ஓட்டங்களைப் பெற்றார். ஒக்ஸ்போர்ட் அணியின் பந்துவீச்சின் சார்பில் ரஜீம் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஒக்ஸ்போர்ட் அணி 5 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் பவி 25, சஜி 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

அளவெட்டி மத்திய அணியின் பந்துவீச்சின் சார்பில் ரஜீம் 1 ,அஜீ 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இறுதியில் 2 விக்கெட்டினால் வெற்றி பெற்று ஒக்ஸ் போர்ட் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. (அ-3-24)

# யாழில் கடற்கரை கரப்பந்து



யாழ்.மாவட்டத்தில் கடற்கரை கரப்பந்தாட்டத்தை வளர்க்கும் நோக்கிலும் சிறந்த வீர, வீராங்கனைகளை உருவாக்கும் வகையிலும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் மாவட்ட அளவிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடர் ஒன்றை இந்த மாத பிற்பகுதியில் காரைநகர் கடற்கரையில் முதல்முறையாக நடத்த யாழ்.கரப்பந்தாட்டச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான வேலைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்போட்டித் தொடரில் ஏழு கழகத்தில் இருந்து ஒரு அணி மட்டுமே பங்குபற்ற விரும்பும் அணிகளை உரிய முறையில் தயார் படுத்தி போட்டிக் களத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

இதன்மூலம் நீண்ட காலக் கனவு நிறைவேறப்படும் எனவும் கடற்கரை கரப் பந்தாட்டத்தில் சாதிக்க நினைத்த வீரர்களுக்கு பெரும் களமாகவும் இது அமையப் பெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# வடமாகாண றக்பி சங்கம் புதிதாக தெரிவு செய்யப்பட்டது

இலங்கை றக்பி, காற்பந்தாட்ட சங்கத்தின் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது. மேற்படி பயிற்சிப் பட்டறையின் பின்னர் வடமாகாணத்திற்கான றக்பி சங்கம் புதிதாக தெரிவு செய்து வைக்கப்பட்டது.

வடமாகாண றக்பி சங்கத்தின் தலைவராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா, செயலாளராக ஆர்.நிசாந்த், பொருளாளராக ஜ.சசிக்குமாரும் போட்டிச் செயலாளராக எம்.பிரதீப்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் உறுப்பினர்களாக ச.கிருஷாந், ரி.நாகநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்திலேயே றக்பி விளையாட்டு வளர்ச்சி கண்டு வருவதுடன் இச்சங்கத்தின் மூலம் றக்பி சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் நாட்களில் பாடசாலை றக்பி அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் ஆர். நிசாந்த் தெரிவித்துள்ளார்.



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்டக் கராத்தேப் போட்டியில் பங்கு பற்றி பதக்கம் வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் அண்மையில் கல்லூரி சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டனர். இதில் பதக்கம் வென்றோருடன் கல்லூரி அதிபர் என். ஞானப்பொன்ராஜா, பொறுப்பாசிரியர் நிசான் மற்றும் பயிற்றுநர் சென்சே விஜயராஜ் ஆகியோர் நிற்பதனை படத்தில் காணலாம்.

# அல்வாய் நண்பர்கள் வி.கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

ஊரெழு விளையாட்டுக்கழக அணிக்கும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற கால் இறுதி ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி, தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உரைகள் வழங்கப்பட்டது. இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மண்ணில் தொடரை சுவீகரித்தது இங்கிலாந்து



இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய 4-வது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்துள்ளது. இதன்மூலம் 28 ஆண்டுகளுக்குப் பின்பு இந்திய மண்ணில் இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடரை வென்றது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1:2 என்று பின்தங்கி இருந்தது.

நாக்பூரில் இடம்பெற்ற 4-வது டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்சன், ஜோ ரூட், மற் பிரையர், கிரேம் ஸ்வான் ஆகியோரின் அரைச் சதங்களின் உதவியுடன் 330 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பாக பியூஸ் சாவ்லா 4 விக்கெட்டுக்களையும், இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுக்களையும், ரவீந்திர ஜடேஜா 2 விக்கெட்டுக்களையும், ரவிச்சந்திரன் அஷ்வின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.


தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடை நிறுத்தியது.

அவ்வணி சார்பாக விராட் ஹோலி சதத்தையும், மகேந்திரசிங் தோனி 99 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன் 4 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 3 விக்கெட்டுக்களையும், மொன்ரி பனேசர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போட்டியைச் சமனிலையில் முடித்துக்கொள்ள இரு அணித்தலைவர்களும் சம்மதித்தனர்.


துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொனதன் ட்ரொட் 143 ஓட்டங்களையும்; இயன் பெல் ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களையும் பெற்றதோடு இயன் பெல் ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களையும் பெற்றதோடு பந்துவீச்சில் ரவிச்சந்திரன் அஷ்வின் 2 விக்கெட்டுக்களையும், பிரக்ஜான் ஓஜா, ரவிந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



இத்தொடரின் முதலாவது போட்டியில் தோல்வியடைந்த இங்கிலாந்து அணி, அடுத்த 2 போட்டிகளையும் வெற்றி கொண்டு இத் தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவானதோடு, தொடரின் நாயகனாக இங்கிலாந்து அணியின் தலை வர் அலஸ்ரெயர் குக் தெரிவானார்.

## சேவாக் சோம்பேறி கவாஸ்கர் பாய்ச்சல்





இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வீரேந்தர் ஷேவாக்கின் சோம் பேறித்தனமான களத்தடுப்பு கடும் விமர்சனத்துக்குள்ளானது.

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தின் போது பெல் கொடுத்த பிடியை ஸ்லிப்பில் நின்று கோட்டை விட்டார்.

இதனையடுத்து சுனில் கவாஸ்கர் அவரது சோம்பேறித்தனமான அணுகுமுறையைச் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

நேற்று முன்தினம் கெவின் பீற்றர்சன் 2 ஓட்டங்களில் இருந்த போது ஜடேஜா பந்தை பீட்டர்சன் எட்ஜ் செய்தார். பந்து ஸ்லீப் திசைக்கு தாழ்வாகச் சென்றது.

அவர் குனிந்திருந்தால் அது பிடியாகியிருக்கும். ஆனால் அவர் குனியவில்லை.

நேற்று அவர், சாவ்லா பந்தை பெல் கட் செய்ய முயல அது நேராக அவரது மார்பளவு உயரத்திற்குச் சென்றது. ஆனால் அவர் கையை எடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்தியதால் பந்து கோட்டை விடப்பட்டது.

இது அநியாயம், ஷேவாக் குனியவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் எப்போதும் சுழற்பந்து வீச்சாளர்கள் வீசும்போது முட்டிக்கு மேல் தான் பிடி (கேட்ச்) வரும் என்று எதிர்பார்ப்பதா? பிடிகள் எப்போதும் சுழற்பந்து வீச்சாளர்கள் வீசும்போது முட்டிக்கால் அளவு அல்லது அதற்குக் கீழ்தான் வரும் என்றார்.

அவர்நிற்கும் விதம் மூலம் இந்திய அணிக்கு ஒரு நன்மையும் ஏற்பட்டு விடவில்லை எனவும் கூறியுள்ளார்.

## ஆஸி டெஸ்டில் மலிங்க பங்கேற்க வாய்ப்பில்லை

இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான டெஸ்ட் தொடரில் லசித் மலிங்க பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தற்போது நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் போதிய வேகத்துடன் பந்துவீசியிருக்கவில்லை.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் பிக்பாஷ் லீக் தொடரில் பங்குபற்றி வரும் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவை அடுத்த 2 போட்டிகளில் பங்குபற்றுமாறு இலங்கைக் கிரிக்கெட் அணி நிர்வாகம் கேட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணிக்காக போட்டிகளில் பங்குபற்றி வரும் அவர், பேர்த் கோச்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் 7 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், ஹோபார்ட் அணிக்கெதிரான போட்டியில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தார்.

இது குறித்து பயிற்சியாளர் கிரஹம் போர்ட் கூறுகையில், பிக்பாஷ் லீக் தொடரில் மலிங்க விளையாடிய போதும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

மலிங்கவின் முழங்கால் உபாதை காரணமாக அவரால் அதிகளவு ஓவர்களை வீச முடியாது. டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றினால் அவரது கிரிக்கெட் எதிர்காலம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.




மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டிகளில் இலங்கைக்கு மலிங்க முக்கியமானவராகக் காணப்படுகின்றார்.

மலிங்க இலங்கைக்கு முக்கியமானவர் எனத் தெரிவித்த அவர், 26-ம் திகதி ஆரம்பிக்கவுள்ள 2-வது டெஸ்ட் போட்டியில் அவரைப் பங்குபற்ற வைக்க முயற்சிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு எதிராக இலங்கை போராட்டம்



(ஹோபார்ட்)

அவுஸ்திரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் 4-ம் நாள் ஆட்டம் நேற்றாகும். நேற்றைய நாள் முடிபில் இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.



விக்கெட் இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக அவ்வணி 132 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதனைத் தொடர்ந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோர்ணர் 68 ஓட்டங்களையும், எட்கோவன் 56 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர். அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும் காயம் காரணமாக மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 96 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், சானக வெலகெதர 89 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஷமிந்த எரங்க ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்படி 393 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி நேற்றைய நாள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்படி இப்போட்டியில் வெற்றி பெற 328 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளதோடு, இன்றைய தினம் முழுவதும் துடுப்பெடுத்தாடினால் இப்போட்டியை சமனிலையில் முடித்துக் கொள்ளலாம்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திமுத் கருணாரத்ன 30 ஓட்டங்களைப் பெற்றார். குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன இருவரும் ஆட்டமிழக்காது துடுப்பெடுத்தாடி வருகின்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க், ஷேன் வோட்சன் இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஹோபார்டில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய



அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடை நிறுத்தியிருந்ததோடு, இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 336 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக குடியேறி...

வருமானம் ஈட்டலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக குடிபெயர்ந்து செல்கின்றனர்.

மக்கள் இவ்வாறு பயணிப்பதால்; எவ்விதமான பிரயோசனமும் இல்லை.

ஏனெனில், அவுஸ்திரேலிய அரசு புதிய சட்டதிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதாவது, சட்டவிரோதமாக குடியேறி புகலிடம் கோருவோர் 72 மணித்தியாலங்களுக்குள் நாடு கடத்தப்படுவர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் 800 பேர் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்க பணம் சம்பாதிக்கும் நோக்கில் சில கடத்தல்காரர்கள் மக்களை ஏமாற்றி அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெறலாம். நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசையை வளர்த்து மக்களை ஏமாற்றுகின்றனர்.

இவ்வாறு ஏமாறும் மக்கள் பணத்தைக் கொடுத்து, உயிர் ஆபத்து மிக்க பாதுகாப்பற்ற பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இதில் சிலர் உயிரிழந்திருக்கின்றனர்.

எனவே இனிவரும் காலங்களில் அவ்வாறு யாரும் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக குடியேறினால் அவர்கள் 72 மணித்தியாலங்களுக்குள் திருப்பி அனுப்பப்படுவர் என்ற கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அத்துடன் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பதற்காக இலங்கை அரசுடன் இணைந்து ஒரு செயற்றிட்டம் ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளோம்.

கடல்வழி பாதுகாப்பு ஒத்துழைப்பு, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் உட்பட 4 அம்ச வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கு மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மனிதக் கடத்தல்களை தடுத்து நிறுத்துவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆஸி வெளிவிவகார அமைச்சர் நான்கு அம்ச திட்டமொன்றை முன்வைத்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தலை ஒழித்துக் கட்டுவதற்கும், நீர்ப்பரப்பு ஒத்துழைப்பின் அதிகரிப்பு, உளவறியும் தகவல்கள் பகிர்வு சட்டவிரோத ஆட்கடத்தலில் கிடைக்கும் வருமானக் குறைப்பிற்குமான 4 அம்ச திட்டம் ஒன்றை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் நேற்று அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்த 4 அம்சத் திட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் கடற்படை அதிகாரிகளும் ஆராயவிருக்கின்றனர் என்று அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)


### தவறிவிட்டது

மூங்கிலாறுக்கும் விசுவமடு 12ஆம் கட்டை சந்திக்கும் இடையில் காணி உறுதிப் பத்திரம் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தந்து உதவவும்.
(சன்மானம் வழுங்கப்படும்)
தொடர்பு: N.பாஸ்கரன்
குறிஞ்சி புத்தகசாலை
விசுவமடு
0770822785, 0775013998
(சு-1807)


## ஆஸி வெளிவிவ...

யிலான பொருளாதார உறவு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிவிவகார செயலாளர் கருணாதிலக அமுனுகம மற்றும் ஜனாதிபதி செயலக ஊடக பேச்சாளர் மொஹான் சமரவிக்கிரம ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நீதிபதிகள்...

முன்னெடுத்துவரும் நடவடிக்கையை விமர்சித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியபோது, அத் தீர்மானத்திற்கு உடன்பட மறுத்திருந்தவர் அனோமா குணதிலக ஆவார்.

அதேநேரம் சட்டத்தரணிகள் சங்க உபதலைவர் பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அனோமா குணதிலகவும், கூறியுள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு அடுத்தபடியாக ஷிராணி திலகவர்த்தன உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக வர வேண்டும் என்று அனோமா குணதிலக கருத்து தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை வைர வியாபாரிகள்
இல.217 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6083, 0714182480


## சுயாதீன...

கட்சி இந்தக் கோரிக்கையை அறிக்கை ஒன்றின் மூலம் விடுத்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறித்த சுயாதீனக் குழு தொடர்பில் ஜனாதிபதி அறிவிப்பை வெளியிட்டார்.

இதன்பின்னர் ஊடகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதும் அவர் அதனை உறுதிப்படுத்தினார்.

இந்நிலையில் தமது அறிவிப்பை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆவணப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது. (எ-11)

## விபத்தில் சிக்கி...

பணிபுரியும் குறித்த நபர், நேற்று ஏ9 அரியாலை புங்கன்குளம் வீதியூடாக சென்றபோது,

அவ் வீதியின் அருகில் உழவு இயந்திரம் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

அவ் உழவு இயந்திரத்துடன் மோதுண்டதில் படுகாயமடைந்த இவர், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

ஆனால், அவர் வரும் வழியிலேயே உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஆப்கான் அமைச்ச...

அமைச்சின் பேச்சாளர் ஜனன் மொசாஸை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஆப்கானிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர், இலங்கை ஜனாதிபதியுடன் ஆப்கானிஸ்தானுக்கு இலங்கையின் அபிவிருத்திக்கான உதவிகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், இலங்கை வெளிவிவகார அமைச்சிலுள்ள தந்திரோபாய கற்கைகளுக்கான நிலையத்தில் ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றவுள்ளார். (எ-11)

## நாட்டில் சீரற்ற...

சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கடற்பகுதிகள் கடும் கொந்தளிப்புடன் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## மரம் முறிந்து...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## மண்சரிவால்...

இதேவேளை சுது கங்கையைக் கடக்க முயன்ற ஒருவர் காணாமல்போயுள்ளதாகவும் சுமார் 300 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் மாத்தளை மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி மண்திட்டு சரிந்து விழுந்ததில் மாத்தளை-கண்டி வீதியும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (எ-11)


விற்பனைக்குண்டு
ஸ்ரான்லி வீதியில் கடை
விற்பனைக்குண்டு
தொடர்பு: 0774726778
(1180)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.